க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2016

மதிப்பீட்டு அறிக்கை

32 - வணிகக் கல்வி

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

Download Past Papers at : www.freebooks.lk

க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2016

மதிப்பீட்டு அறிக்கை

32 - வணிகக் கல்வி



ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

Download Past Papers at : www.freebooks.lk

முழுப் பதிப்புரிமையுடையது.

வணிகக் கல்வி

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2016

நிதி அனுசரணை

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை
கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP-WB) மூலம்

Download Past Papers at : www.freebooks.lk

அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையானது இலங்கையின் சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தைச் சான்றுபடுத்தல் இப் பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்த போதும் தேசிய பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர் கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவு செய்தாலும் கூட இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம் பெறுவதால் அடைவுப் பரீட்சையாகவும் தேர்வுப் பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம் நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையைச் சான்றுபடுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் இப்பரீட்சைக்காக 207304 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 40072 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும்கூட பெரிதும் முயற்சி செய்கின்றனர். அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டே இந்த மதிப்பீட்டு அறிக்கையை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள், பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. எனவே இவ் அறிக்கையைக் கூடுதலான பிரிவினர்களின் ஆய்விற்குற்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) வணிகக் கவ்வி பாடத்தின் பாட நோக்கம் பாட அடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளது. இதனடிப்படையில் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்ற விதம், மாவட்ட மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம், வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாட அடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் வணிகக்கல்விப் பாடத்தின் வினாத்தாள் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் ஒவ்வொரு பகுதிகளுக்கும் புள்ளிகள் பெறப்பட்ட விதம் என்பன பற்றி விரிவாகக் குறிப்பிடும் பாட அடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2016 பரீட்சையில் வணிகக்கல்விப் பாடத்தின் வினாத்தாள் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. இதன் அடிப்படையில் வினாத்தாள் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்களும் முடிபுகள், மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபு ரீதியான சோதனைக் கோட்பாடு மற்றும் Classical testing theory, உருப்படித் துலங்கள் கோட்பாடு Item response theory என்பவற்றைப் பயன்படுத்திப் பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்களும் என்பன இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாக்களுக்கு விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் கற்றல் - கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையில் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள் அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் பற்றியும் இந்த அறிக்கையானது பெரிதும் துணைபுரியும் என நான் நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக் கூடிய பயன்தரும் கருத்துகள் ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள், ஊக்கத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் இத்தொகுப்புக்கான நிதி அனுசரணை வழங்கி எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை முறைமையை மீளமைக்கும் செயற்றிட்டத்துக்கும் (TSEP - WB) எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீ. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2017 டிசம்பர் 01
ஆய்வு அபிவிருத்திக் கிளை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

Download Past Papers at : www.freebooks.lk

வழிகாட்டல்	:	பீ. சனத் பூஜித பரீட்சை ஆணையாளர் நாயகம்
ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும்	:	கயாத்திரி அபேகுணசேகர பரீட்சை ஆணையாளர் (ஆய்வு / அபிவிருத்தி மற்றும் மதிப்பீடு)
இணைப்பாக்கம்	:	லசிக சமரகோன் உதவிப் பரீட்சை ஆணையாளர் (ஆய்வு அபிவிருத்திக் கிளை)
தொகுப்பு	:	பேராசிரியர் காமினி த அல்விஸ் கொழும்புப் பல்கலைக்கழகம்
		கலாநிதி எம்.டீ. புஸ்பகுமாரி சிசேஷ்ட விரிவுரையாளர் வணிக நிர்வாக விஞ்ஞானக் கல்வித் துறை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம்
		யூ.எல்.டீ.பீ. குணசேகர சிரேஷ்ட விரிவுரையாளர் களனிப் பல்கலைக்கலகம்
ஆக்கக் குழு	:	டபிள்யு.எம். சுதுபண்டா வணிகக் கல்வி - ஆசிரிய ஆலோசகர் கோட்டக் கல்விப் பணிமனை பஸ்ஸரை
		டபிள்யு.எம். ஏகநாயக்க வணிகக் கல்வி - ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்விப் பணிமனை ஸ்ரீ ஜயவர்தனபுர
		டபிள்யு.டீ. ரஞ்சித் ஜயநாத ஆசிரியர் சேவை I கொ/ சாந்த பீதர் கல்லூரி கொழும்பு - 04
		யூ.ஜீ.டீ. சமன்குமாரி ஆசிரியர் சேவை I மேமா/பிலி/தர்மராஜ ம.வி. பிலியந்தலை
		செறீன் கண்டம்பி ஆசிரியர் சேவை I அனுலா வித்தியாலயம் நுகேகொட
		வசந்த காமினி அபேசிங்ஹ விசாகா கல்லூரி கொழும்பு - 05
மொழிபெயர்ப்பு	:	எம்.எச்.எம். புஹாரி ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு நிலை) கேகாலை
கணினிப் பக்க வடிவமைப்பு	:	காஞ்சனா சுப்ரமணியம் கணினித் தரவுப் பதிவாளர்
முகப்பு அட்டை வடிவமைப்பு	-	வை.எஸ். அனுராதி அபிவிருத்தி அதிகாரி

Download Past Papers at : www.freebooks.lk

உள்ளடக்கம்

பக்க எண்

பகுதி I

1 **பாடக் குறிக்கோள்களும், பாட அடைவு தொடர்பான தகவல்களும்**

1.1 **வணிகக்கல்விப் பாடத்தின் குறிக்கோள்கள்** 1

1.2 **பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை. 2

1.2.2 பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம். 2

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் 3

1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 4

1.3 **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இன் அடைவு 5

1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 6

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 6

1.3.4 வினாப்பத்திரம் II இன் அடைவு 7

பகுதி II

2 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.1 **வினாப்பத்திரம் I ற்கு விடையளிக்கப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பான தகவல்கள்**

2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 9

2.1.2 வினாப்பத்திரம் I (1 தொடக்கம் 30 வரை) 10

2.1.3 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும். 15

2.1.4 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானம் 16

2.1.5 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கான தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்) 17

2.1.6 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முடிவும் ஆலோசனைகளும் 18

2.1.7 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களும் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 19

2.1.8 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பு 26

2.1.9 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் 27

2.1.10 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும், ஆலோசனைகளும் 28

2.2 **வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 30

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 31

2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 69

பகுதி III

3 **விடையளிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 70

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்** 72

Download Past Papers at : www.freebooks.lk

பகுதி I

1 பாடக் குறிக்கோள்களும், பாட அடைவு தொடர்பான தகவல்களும்

1.1 வணிகக்கல்விப் பாடத்தின் குறிக்கோள்கள்

இப்பாடத்திட்டத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள்

- மனிதத் தேவைகள் விருப்பங்கள் நிறைவேற்றுதல் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிருவன அல்லது அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளை அறிந்துக் கொள்ளக் கூடிய முறைகள் தொடர்பான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார்.
- மாற்றமுறும் வணிகச் சூழலை விளங்கிக் கொள்வதன் மூலம் அதற்கிசைவாக்கமடைவதற்குத் தேவையான திறன்களைப் பெற்றுக்கொள்வார்.
- வணிகமும் அதனுடன் தொடர்புடைய துணைச் சேவைகள் தொடர்பாகவும் பெற்றுக்கொள்ளும் நியாய பூர்வமான அறிவினைச் செயற்பாட்டு ரீதியாகப் பயன்படுத்துவார்.
- வணிகம் தொடர்பான எண்ணக்கருக்கள், அடிப்படைத் தத்துவங்கள் என்பவற்றைக் கற்பதற்கும் சிக்கலான பாட விடையங்களை இலகுவாகக் கிரகித்துக் கொள்வதற்குமான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார்.
- முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவத் திறன்களை விருத்தி செய்து கொள்வார்.
- வணிக முறைமையொன்றின் தெழிற்பாடுகளுக்கிடையில் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவார்.
- தேசிய, வலைய, பூகோலமயமாதல் ரீதியாக வணிகங்களில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- இலங்கையில் சாதகமான வணிகக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான மனப்பாங்கினைக் கட்டி எழுப்பவார்.
- ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்துடன் வணிகங்களை ஆரம்பிப்பதற்கும், அதனை நடத்திச் செல்வதற்கும் தேவையான திரன்களைப் பெற்றுக் கொள்வார்.
- தொழில் வகிபாகங்களின் கருமங்களை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்குத் தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- சமூகப் பொருளாதார மேம்பாடு கருதி முகாமைத்துவம் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் திரன்களை விருத்தி செய்துகொள்வார்.
- உயர் கல்வியில் ஈடுபடுவதற்கான முன் ஆயத்தத்தைப் பெற்றுக் கொள்வார்.

Download Past Papers at : www.freebooks.lk

1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

மொழிமூலம்	பாடசாலைப் பரீட்டார்த்திகள்	தனிப்பட்டப் பரீட்சார்த்திகள்	மொத்தம்
சிங்களம்	41566	4502	46068
தமிழ்	7593	1159	8752
ஆங்கிலம்	1977	839	2816
மொத்தம்	**51136**	**6500**	**57636**

அட்டவணை 1

1.2.2 பரீட்சார்த்திகளினால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

தரம்	பாடசாலைப் பரீட்சார்த்திகள்		தனிப்பட்ட பரீட்சார்த்திகள்		மொத்தம்	சதவீதம்
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்		
A	8640	16.90	690	10.62	9330	16.19
B	9894	19.35	859	13.22	10753	18.66
C	15132	29.59	1663	25.58	16795	29.14
S	13212	25.84	2016	31.02	15228	26.42
F	4258	8.33	1272	19.57	5530	9.59
மொத்தம்	**51136**	**100.00**	**6500**	**100.00**	**57636**	**100.00**

அட்டவணை 2

Download Past Papers at : www.freebooks.lk

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

மாவட்டம்	தோற்றியோரின் எண்ணிக்கை	அதி சிறந்த சித்தி (A) பெற்றவர்		விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர்		திறமைச் சித்தி (C) பெற்றவர்		சாதாரண சித்தி (S) பெற்றவர்		சித்தி (A+B+C+S) பெற்றவர்		சித்தி அடையாதோர் (F)	
		எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
1. கொழும்பு	8128	1509	18.57	1616	19.88	2323	28.58	2071	25.48	7519	92.51	609	7.49
2. கம்பஹா	4829	950	19.67	872	18.06	1404	29.07	1228	25.43	4454	92.23	375	7.77
3. களுத்துறை	2266	324	14.30	401	17.70	675	29.79	639	28.20	2039	89.98	227	10.02
4. கண்டி	2823	376	13.32	477	16.90	798	28.27	848	30.04	2499	88.52	324	11.48
5. மாத்தளை	745	101	13.56	130	17.45	202	27.11	211	28.32	644	86.44	101	13.56
6. நுவரெலியா	1091	133	12.19	197	18.06	373	34.19	287	26.31	990	90.74	101	9.26
7. காலி	2206	381	17.27	378	17.14	597	27.06	635	28.79	1991	90.25	215	9.75
8. மாத்தறை	1281	191	14.91	257	20.06	372	29.04	341	26.62	1161	90.63	120	9.37
9. அம்பாந்தோட்டை	788	110	13.96	134	17.01	235	29.82	230	29.19	709	89.97	79	10.03
10. யாழ்ப்பாணம்	855	123	14.39	126	14.74	231	27.02	274	32.05	754	88.19	101	11.81
11. கிளிநொச்சி	140	14	10.00	26	18.57	47	33.57	43	30.71	130	92.86	10	7.14
12. மன்னார்	191	10	5.24	27	14.14	62	32.46	71	37.17	170	89.01	21	10.99
13. வவுனியா	334	33	9.88	46	13.77	115	34.43	107	32.04	301	90.12	33	9.88
14. முல்லைத்தீவு	140	21	15.00	28	20.00	52	37.14	36	25.71	137	97.86	3	2.14
15. மட்டக்களப்பு	641	92	14.35	116	18.10	187	29.17	189	29.49	584	91.11	57	8.89
16. அம்பாறை	869	85	9.78	127	14.61	260	29.92	277	31.88	749	86.19	120	13.81
17. திருகோணமலை	617	83	13.45	107	17.34	170	27.55	178	28.85	538	87.20	79	12.80
18. குருநாகல்	2204	352	15.97	433	19.65	660	29.95	553	25.09	1998	90.65	206	9.35
19. புத்தளம்	1251	191	15.27	237	18.94	404	32.29	309	24.70	1141	91.21	110	8.79
20. அனுராதபுரம்	1230	195	15.85	229	18.62	360	29.27	336	27.32	1120	91.06	110	8.94
21. பொலன்னறுவை	539	65	12.06	110	20.41	145	26.90	149	27.64	469	87.01	70	12.99
22. பதுளை	1295	121	9.34	195	15.06	395	30.50	429	33.13	1140	88.03	155	11.97
23. மொனராகலை	642	95	14.80	122	19.00	199	31.00	169	26.32	585	91.12	57	8.88
24. இரத்தினபுரி	1743	231	13.25	342	19.62	527	30.24	467	26.79	1567	89.90	176	10.10
25. கேகாலை	1321	206	15.59	233	17.64	375	28.39	372	28.16	1186	89.78	135	10.22
மொத்தம்	**38169**	**5992**	**15.70**	**6966**	**18.25**	**11168**	**29.26**	**10449**	**27.38**	**34575**	**90.58**	**3594**	**9.42**

அட்டவணை 3

Download Past Papers at : www.freebooks.lk

1.2.4 வகுப்பாயிடையினடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்

வகுப்பாயிடை	மீடிறன்	மீடிறன் சதவீதம்	திரள் மீடிறன்	திரள் மீடிறன் சதவீதம்
91-100	86	0.15	57636	100.00
81-90	2929	5.08	57550	99.85
71-80	8785	15.24	54621	94.77
61-70	11401	19.78	45836	79.53
51-60	12416	21.54	34435	59.75
41-50	11283	19.58	22019	38.20
31-40	**7261**	**12.60**	**10736**	**18.63**
21-30	2779	4.82	3475	6.03
11-20	646	1.12	696	1.21
01-10	49	0.09	50	0.09
00-00	1	0.00	1	0.00

அட்டவணை 4

மேல் குறிப்பிடப்பட்ட அட்டவணைக்கமைய இப் பாடத்திற்காகத் தோற்றிய 57636 பரீட்சார்த்திகளுள் 31 - 40 என்ற வீச்சினுள் புள்ளிகளைப் பெற்றப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 7261 ஆகும். அதனைச் சதவீதமாக எடுக்கும்போது 12.60% ஆகும். 40 அல்லது அதைவிடக் குறைவாகப் புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 10736 ஆவதோடு அது 18.63% ஆகும்.

Download Past Papers at : www.freebooks.lk

1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

1.3.1 வினாத்தாள் I இன் அடைவு



வரைபு1 (RD/16/05/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)

மேற்காட்டிய வரைபிற்கமைய 06 ஆம் வினாவிற்கே விண்ணப்பதாரிகளில் கூடுதலான எண்ணிக்கையினர் விடையளித்துள்ளனர். அது 94% ஆகும். அதேபோன்று 41 ஆவது வினாவிற்கே விண்ணப்பதாரிகளுள் குறைவான எண்ணிக்கையினர் விடையளித்துள்ளனர். அது 15% ஆகும். 5, 41, 44, 47, 50 ஆகிய வினாக்களுக்கு விண்ணப்பதாரிகளில் 35% இற்கும் குறைவான தொகையினரே சரியான விடையளித்துள்ளனர்.

Download Past Papers at : www.freebooks.lk

1.3.2 வினாத்தாள் II - இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்



உதாரணமாக எடுத்து நோக்கும்போது விடையளிப்பதற்கு வினாக்களைத் தெரிவுசெய்யும்போது 01 ஆம் வினாவினை 99% ஆன பிரிவினர்கள் மட்டுமே தெரிவுசெய்துள்ளதுடன் 08 ஆம் வினாவினை 30% சதவீத்தினர் மட்டுமே தெரிவுசெய்துள்ளனர். வினாக்களைத் தெரிவுசெய்யும்போது 1, 2, 3, 5 ஆகிய வினாக்களை 80% சதவீதத்தையும் விடக் கூடிய பிரிவினர் தெரிவுசெய்துள்ளனர்.

வரைபு 2 - (RD/16/02/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)

1.3.3 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்



உதாரணமாக இங்கு 01 ஆம் வினாவிற்காக 20 புள்ளிகளே ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வரைபிற்கமைய அப்புள்ளிகளில் 16-20 ஆயிடையில் விண்ணப்பதாரிகளில் 20% சதவீதத்தினர் மட்டுமே புள்ளிகள் பெற்றுள்ளனர். 11 - 15 ஆயிடையில் விண்ணப்பதாரிகளில் 42% சதவீதத்தினர் மட்டுமே புள்ளிகள் பெற்றுள்ளனர். 6 - 10, 0 - 5 ஆகிய ஆயிடைகளில் விண்ணப்பதாரிகளில் முறையே 31%, 07% சதவீதத்தினர் மட்டுமே புள்ளிகள் பெறப்பட்டுள்ளனர். 5, 6, 8 ஆகிய வினாக்களுக்கு 76% சதவீதத்தை விடக் குறைவான புள்ளிகளைப் பெறப்பட்ட விண்ணப்பதாரிகளில் 10% சதவீதத்தை விடக் குறைவான மட்டத்திலே காணப்படுகின்றது.

வரைபு 3 - (RD/16/02/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)

Download Past Papers at : www.freebooks.lk

1.3.4 வினாத்தாள் II இன் அடைவு



வரைபு 4.1 (RD/16/04/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)

Download Past Papers at : www.freebooks.lk



வரைபு 4.2 (RD/16/04/AL பாடவித்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களினூடாகத் தயாரிக்கப்பட்டது.)

Download Past Papers at : www.freebooks.lk

பகுதி II

2 வினாக்களும், அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பான தகவல்கள்

2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு

நேரம் 02 மணித்தியாலங்களைக் கொண்டது. மொத்தப்புள்ளிகள் 100 ஆகும்.

* 1 - 30 வரையிலான பல்தேர்வு வினாக்கள் 30 உம் 31 - 40 வரையில் வினாக்கள் 10 இற்குப் பொருத்தமான பதங்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புதலும், 41 - 50 வரையான உறுதியான விடையினை வழங்குவதற்கான வினாக்கள் 10 இனையும் உள்ளடக்கியதாகும்.
* அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
* ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

Download Past Papers at : www.freebooks.lk

2.1.2 வினாப்பத்திரம் I (வினா இலக்கம் 1 தொடக்கம் 30 வரை)

1. தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்காகப் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது நுகர்வோர் ஒருவரால் அடிப்படையில் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள்

(1) செலவீனங்கள் மற்றும் பொதி
(2) பொதி மற்றும் தரம்
(3) திருப்தி மற்றும் வியாபாரப் பெயர்
(4) செலவீனங்கள் மற்றும் வியாபாரப் பெயர்
(5) செலவீனங்கள் மற்றும் திருப்தி (.....)

2. பின்வருவனவற்றுள் ஆரம்பத்தில் இருந்தே பூகோளச் சந்தையைக் குவிமையமாகக் கொண்டு உருவாகிய வணிகம் (Born Global)

(1) மோட்டார் வாகனங்கள் (Motor vehicles)
(2) மின் உபகரணங்கள் (Electrical equipment)
(3) ஆடைத்தொழில் (Apparel)
(4) கட்டுமானங்கள் (Constructions)
(5) சமூக வலைத்தளப் பக்கங்கள் (Social network sites) (.....)

3. பின்வருவனவற்றுள் ஒரு நவீன வணிகப்போக்கு **அல்லாதது** எது?

(1) பூகோளமயமாதல்
(2) இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள்
(3) பேரளவு உற்பத்தி
(4) பசுமை உற்பத்தி
(5) வணிக வெளிமூலங்கள் (Business outsourcing) (.....)

4. பின்வரும் அட்டவணையில் முறையே **X** நிரலானது வணிக வகைப்படுத்தலுக்கான சில அடிப்படைகளையும் **Y** நிரலானது அவ்வடிப்படைகளுடன் தொடர்புடையதான சில உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. உடைமை	1. இரத்தினக்கல் அகழ்வு
B. குறிக்கோள்	2. அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்
C. அளவுத்திட்டம்	3. இரத்தினக்கல் பட்டை தீட்டுதல் (மினுக்குதல்)
D. கைத்தொழில் மூலம்	4. இரத்தினக்கற் கைத்தொழிலுக்கான இலவச அறிவுரை
E. உற்பத்தியின் தன்மை	5. இரண்டு ஊழியர்களுடனான இரத்தினக்கல் வணிகம்

ஒவ்வொரு வணிக வகைப்படுத்தலுக்கான அடிப்படைகளும் பொருத்தமான உதாரணங்களுடன் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 2, B - 5, C - 3, D - 4, E - 1
(2) A - 2, B - 4, C - 5, D - 1, E - 3
(3) A - 2, B - 3, C - 4, D - 1, E - 5
(4) A - 1, B - 3, C - 2, D - 5, E - 4
(5) A - 4, B - 2, C - 5, D - 1, E - 3 (.....)

5. சாமந்தி என்பவர் வெதுப்பக உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்காக 'சாமந்தி ஹோட்டல்' என்னும் வணிகத்தை மாகாணசபையின் அனுமதியுடன் ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு அண்மையிலுள்ள தனது வீட்டில் தாபித்தார். இவர் இரு வேலையாட்களை வேலைக்கு அமர்த்தியிருந்ததுடன் ஹோட்டலின் முகாமையைத் தனது மகனிடத்தில் ஒப்படைத்திருந்தார்.

இதன்படி சாமந்தியின் வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினரின் எண்ணிக்கை

(1) 3 (2) 4 (3) 5 (4) 6 (5) 7 (.....)

6. பின்வரும் அட்டவணையானது சில பேரண்டச் சூழல் காரணிகளையும் அக்காரணிகளுக்கான உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

பேரண்டச் சூழல் காரணிகள்	உதாரணங்கள்
A. மக்கட்தொகை	1. றோபோ தொழில்நுட்ப அபிவிருத்தி
B. தொழினுட்பம்	2. முதியோர் சனத்தொகை அதிகரிப்பு
C. பொருளாதாரம்	3. உலக எண்ணெய் விலை அதிகரிப்பு
D. அரசியல்	4. பாவனைக்கான பொலித்தீனின் தடிப்பு தொடர்பிலான நிபந்தனை
E. சட்டம்	5. ஐந்தாண்டுத் தேசிய அபிவிருத்தித் திட்டத்தைச் சமர்ப்பித்தல்

பேரண்டச் சூழல் காரணிகளும் உதாரணங்களும் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4, E - 5
(2) A - 4, B - 5, C - 2, D - 3, E - 1
(3) A - 2, B - 1, C - 3, D - 5, E - 4
(4) A - 4, B - 3, C - 5, D - 2, E - 1
(5) A - 2, B - 1, C - 5, D - 3, E - 4 (.....)

Download Past Papers at : www.freebooks.lk

7. பின்வரும் அட்டவணையானது வணிகமொன்று, தனது அக்கறையுடைய தரப்பினர் நோக்கில் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக எடுத்த சில நடவடிக்கைகளையும், அக்கறையுடைய தரப்பினர்களைக் கொண்ட ஒரு பட்டியலையும் எடுத்துக் காட்டுகின்றது.

நடவடிக்கைகள்	அக்கறையுடைய தரப்பினர்
A. நிறுவனத்துக்குள்ளே வைத்திய அலகொன்றைத் தாபித்தல்	1. அரசாங்கம்
B. நாட்டைக் கட்டியெழுப்பும் வரிக்குப் பங்களிப்புச் செய்தல்	2. வாடிக்கையாளர்
C. நியமங்களுக்கு அமைவாகக் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல்	3. ஊழியர்கள்
D. பொருட்களின் உள்ளடக்கங்களைச் சுட்டுத்துண்டில் காட்சிப்படுத்துதல்	4. உடைமையாளர்

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளையும் பொருத்தமான அக்கறையுடைய தரப்பினரையும் சரியாக எடுத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 3, C - 2, D - 4 (2) A - 1, B - 3, C - 4, D - 2
(3) A - 2, B - 4, C - 3, D - 1 (4) A - 3, B - 1, C - 2, D - 4
(5) A - 3, B - 1, C - 4, D - 2 (.....)

8. வணிக நிறுவனம் தனது போட்டியாளர்களைக் கருத்திற் கொண்டு உருவாக்கும் ஓர் ஒழுக்க நெறி
(1) சகல ஊழியர்களையும் சமமாக நடாத்துதல்
(2) விளம்பரப்படுத்தலின்போது ஏனைய வணிகங்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தாதிருத்தல்
(3) சமயக் குறியீடுகளை வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தாதிருத்தல்
(4) உயர் தரமுடைய பொருட்களை வழங்குதல்
(5) முதியோரைக் கனம் பண்ணுதல் (.....)

9. பின்வருவனவற்றுள் எதனை ஓர் அரசாங்க வரி வருமானமாகக் கருத்திற்கொள்ள முடியும்?
(1) சாரதி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் (2) புகையிரதக் கட்டணங்கள்
(3) இறை வரிக்கட்டணம் (4) தபாற் கட்டணங்கள்
(5) வங்கிக் கட்டணங்கள் (.....)

10. பின்வருவனவற்றுள் வியாபார நெறிமுறையற்ற நடவடிக்கையாக எதனைக் கருத முடியும்?
(1) உரிய திகதியில் ஊழியர்களின் சம்பளங்களை வழங்காதிருத்தல்
(2) வியாபார ஸ்தலத்தை சுத்தமாகப் பேணாதிருத்தல்
(3) ஊழியரை வேலையில் இருந்து நீக்குதல்
(4) குறிக்கப்பட்டுள்ள விலையை விட உயர்வான விலைக்கும் பொருட்களை விற்பனை செய்தல்
(5) வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவுமுறையை பேணாதிருத்தல் (.....)

11. அங்கீகார வணிகத்தினூடாக அங்கீகாரம் பெறுபவருக்குக் கிடைக்கும் ஓர் அனுகூலம்
(1) முதலீட்டு இடர் இன்மை
(2) இலாபங்களின் நிச்சயத்தன்மை
(3) குறைந்த கிரயத்தில் அங்கீகார வணிக உரிமத்தைப் (அனுமதிப்பத்திரத்தை) பெறமுடிதல்
(4) வணிகச் செயற்பாடுகளைச் சுதந்திரமாகக் கொண்டு நடாத்த முடிதல்
(5) அங்கீகாரம் வழங்குபவரிடமிருந்து பயிற்சி மற்றும் அறிவுரைகளைப் பெற முடிதல் (.....)

12. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தில் காணப்படும் பங்குடைமை சம்பந்தமான ஒரு விடயம்
(1) பங்காளருடைய பிணக்குகளுக்கான பிரேரணை (2) பங்காளர் மூலதனம்
(3) பங்குடைமைகளுக்கான பதிவு (4) பங்காளர் எண்ணிக்கை
(5) பங்குடைமைகளின் கலைப்பு (.....)

13. பின்வருவன பல்வேறு வகையான வணிகங்களின் சில குணவியல்புகள் ஆகும்.
A - வருடாந்தக் கணக்கு அறிக்கைகளைப் பிரசுரித்தல்
B - உடைமையாளர்களிடமிருந்து வேறுபட்ட சட்ட ரீதியான அலகாகக் காணப்படுதல்
C - நிர்வாகத்தில் உடைமையாளர்களின் ஈடுபாடு கட்டாயமானதாக இருத்தல்
D - பதிவுசெய்தல் கட்டாயமானதாக இருத்தல்
E - திறனுள்ள முகாமையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடிதல்
F - உடைமையாளர்களின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுதல்

மேலே தரப்பட்டவற்றுள் வரையறுத்த பொதுக் கம்பனிகளுக்கு (PLC) உரிய குணவியல்புகளை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C, D (2) A, B, D, E (3) A, B, D, F (4) A, C, D, F (5) C, D, E, F (.....)

Download Past Papers at : www.freebooks.lk

14. கூட்டுறவு அமைப்புடன் தொடர்புடைய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - ஜனநாயக அங்கத்துவக் கட்டுப்பாடு
B - அரசாங்கம் பற்றிய அக்கறை
C - கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் தகவல்களை வழங்குதல்
D - குறைவான கிரயத்தில் பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல்
E - சுயாதீனம் மற்றும் சுதந்திரம்
F - பல்வேறு வகைப்பட்ட வணிகத் தொழிற்பாடுகளில் ஈடுபடல்
மேலே தரப்பட்டவற்றுள் கூட்டுறவுக்கான கொள்கைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது?
(1) A, B, C (2) A, B, E (3) A, C, E (4) A, C, F (5) B, D, E (.....)

15. முயற்சியாண்மையின் மூலம் முயற்சியாளர் ஒருவருக்கு கிடைக்கும் தனிப்பட்ட அனுகூலம்
(1) மொத்த உள்நாட்டு வருமானம் அதிகரித்தல்
(2) வேலைவாய்ப்பு அதிகரித்தல்
(3) சமூக அந்தஸ்து மற்றும் அங்கீகாரம் அதிகரித்தல்
(4) புதிய பொருட்கள் சேவைகளை நுகர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தல்
(5) மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்தல் (.....)

16. 'சமூக முயற்சியாண்மை' என்பதை மிகவும் சரியாக விவரிப்பது
(1) இடம்பெயர்ந்த மக்களுக்காகக் கூடாரங்களை வழங்குதல்
(2) பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களை வழங்குதல்
(3) தமது வணிகத்தில் குடும்ப அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல்
(4) எரிபொருள் நுகர்வைக் குறைக்கக்கூடிய வகையில் ஒரு புதுமையான உபகரணத்தைத் தயாரித்தல்
(5) இயலாமையுடைய இளவயதினருக்காக நிறுவனத்துக்குள்ளே 10% வேலைவாய்ப்பை வழங்குதல் (.....)

17. தன்னியக்க வங்கிச் சேவைகளின் (Automated Banking Services) மூலம் வங்கிக்கு மட்டும் கிடைக்கக்கூடிய ஓர் அனுகூலம்
(1) நேரத்தைச் சேமிக்க முடிதல்
(2) சேவை விரிவாக்கத்தின் மூலம் அதிக இலாபத்தை உழைக்கக்கூடியதாக இருத்தல்
(3) பட்டியல் கொடுப்பனவுகளை இலகுவாகச் செலுத்தக்கூடியதாக இருத்தல்
(4) கணக்குகள் தொடர்பான தகவல்களை இலகுவாகப் பெறக்கூடியதாக இருத்தல்
(5) கணக்குகளுக்கிடையே நிதிகளை மாற்றக்கூடியதாக இருத்தல் (.....)

18. 'இலத்திரனியல் வணிகங்கள்' (e - business) என்பதனைச் சரியாக விவரிக்கின்ற கூற்று
(1) கணினிகள் ஊடாக வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபடல்
(2) கொடுக்கல்வாங்கல்களுக்காக வலையமைப்புகளைப் பயன்படுத்துதல்
(3) ஒட்டுமொத்த வணிகச் செயன்முறையைச் செயற்படுத்துவதற்காக வலையமைப்பைப் பயன்படுத்துதல்
(4) கொடுக்கல்வாங்கல்களுக்காக இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துதல்
(5) வணிக நிறுவனங்களின் கணக்குகளைத் தயாரிப்பதற்காக மென்பொருள்களைப் பயன்படுத்துதல் (.....)

19. ஏற்றுமதி நடைமுறையின்போது ஏற்றுமதியாளர் ஒருவருக்குத் தனது பொருட்களுக்கான உறுதியான பெறுவனவை உறுதி செய்கின்ற முறை எது?
(1) வார்நாமம் (2) நாணயக் கடிதம்
(3) வாக்குறுதிச் சீட்டு (4) காப்புறுதிப் பத்திரம்
(5) காசோலை (.....)

20. இணையத்தினூடு வழிவருமுறையிலான கொள்வனவுகளுக்கு (Online Purchasing) மட்டும் பொருத்தமான தனித்துவமானதொரு குணவியல்பு
(1) பொருட்களைத் தெரிவுசெய்யக்கூடியதாக இருத்தல்
(2) விலைகளை ஒப்பிடக்கூடியதாக இருத்தல்
(3) தேவையான பொருட்கள் தொடர்பில் மட்டும் கவனம் செலுத்தக்கூடியதாக இருத்தல்
(4) கடன் அட்டை மூலம் கொடுப்பனவைச் செய்யக்கூடியதாக இருத்தல்
(5) பேரம் பேசக்கூடியதாக இருத்தல் (.....)

21. வணிக நிறுவனம் ஒன்றின் வினைத்திறனை அடைந்துகொள்வதற்கு வசதி செய்கின்ற ஒரு காரணி
(1) சூழலுக்கு இசைவாதல் (2) முறையாகத் திட்டங்களைத் தயாரித்தல்
(3) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் (4) வள விரயங்களைக் குறைத்தல்
(5) போட்டிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல் (.....)

Download Past Papers at : www.freebooks.lk

22. நிறைவேற்று ஆதார முறைமை (Executive Support Systems) பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) நடுத்தர முகாமைத் தீர்மானம் எடுத்தலுக்கு ஆதரவான ஒரு முறைமையாகும்.
(2) உயர் முகாமைத் தீர்மானம் எடுத்தலுக்கு ஆதரவான ஒரு முறைமையாகும்.
(3) தொடர்பாடல் செயன்முறைக்கு ஆதரவான ஒரு முறைமையாகும்.
(4) பருவகால அறிக்கைகளைத் தயாரிப்பதற்குரிய தகவல்களை வழங்கும் ஒரு முறைமையாகும்.
(5) நாளாந்த செயற்பாடுகள் தொடர்பான தரவுகளைப் பதிவு செய்வதற்கான ஒரு முறைமையாகும். (.....)

23. உயர்மட்ட முகாமையாளர்களுக்கு எக்காரணத்தினால் எண்ணக்கருவாக்கத் திறன் முக்கியமானதாகக் காணப்படுகின்றது?
(1) நாளாந்த வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்காக
(2) தீர்மானங்கள் தொடர்பில் சிறந்த அமுல்படுத்தல்களுக்காக
(3) நபர்களுக்கிடையேயான (ஆளிடை) தொடர்புகளை முன்னேற்றுவதற்காக
(4) நீண்டகாலத் தந்திரோபாயத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக
(5) கீழ்மட்ட முகாமையாளர்களை மேற்பார்வை செய்வதற்காக (.....)

24. பின்வரும் அட்டவணையில் முறையே **X** நிரலானது முகாமைசார் பதவிநிலைகளுக்கான சோடிகளையும் **Y** நிரலானது திணைக்களப்படுத்தலுக்கான சில அடிப்படைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. நிதி முகாமையாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர்	1. உற்பத்திப்பொருள்
B. ஆடை உற்பத்தி முகாமையாளர், தோற்பொருட்கள் உற்பத்தி முகாமையாளர்	2. செயன்முறை
C. மொத்தச் சந்தைப்படுத்தல் முகாமையாளர், சில்லறைச் சந்தைப்படுத்தல் முகாமையாளர்	3. தொழிற்பாடு
D. தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர், பொதிசெய்தலுக்கான முகாமையாளர்	4. வாடிக்கையாளர்

முகாமைசார் பதவிநிலைகளுக்கமைய திணைக்களப்படுத்தலுக்கான அடிப்படைகள் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A - 1, B - 2, C - 3, D - 4 (2) A - 3, B - 1, C - 4, D - 2
(3) A - 3, B - 1, C - 2, D - 4 (4) A - 2, B - 4, C - 1, D - 3
(5) A - 2, B - 1, C - 4, D - 3 (.....)

25. பின்வரும் அட்டவணையில் முறையே **X** நிரலானது சந்தைப்படுத்தல் தொடர்பாடல் கலவையையும் (விற்பனை மேம்படுத்தல் கருவிகளையும்) **Y** நிரலானது அது தொடர்பான சில உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. விளம்பரப்படுத்தல்	1. அதிஷ்டலாபச் சீட்டுக் குலுக்கல் மூலம் வெகுமதிகள் வழங்கல்
B. விற்பனை மேம்படுத்தல்கள்	2. தொலைக்காட்சி விளம்பரங்கள்
C. பொதுசனத் தொடர்புகள்	3. வீட்டுக்கு வீடு விற்பனை செய்தல்
D. தனிப்பட்ட விற்பனை	4. விளையாட்டுப் போட்டிக்கான அனுசரணை

சந்தைப்படுத்தல் தொடர்பாடல் கலவையின்படி அது தொடர்பான உதாரணங்கள் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A - 1, B - 4, C - 2, D - 3 (2) A - 2, B - 1, C - 4, D - 3
(3) A - 2, B - 3, C - 1, D - 4 (4) A - 3, B - 2, C - 4, D - 1
(5) A - 4, B - 2, C - 3, D - 1 (.....)

26. ஊழியர் ஒருவரது தலைமைத்துவத் திறனை அதிகரிக்கச் செய்யும் பயிற்சி முறை
(1) தொழினுட்பப் பயிற்சி (2) நடத்தைசார் பயிற்சி
(3) வேலையின் போதான பயிற்சி (4) நகலான செயற்பாட்டுப் பயிற்சி (Simulation training)
(5) பயிலுனர் பயிற்சி (.....)

Download Past Papers at : www.freebooks.lk

27. பின்வரும் அட்டவணையானது நிறுவனமொன்றின் சில நடவடிக்கைகளையும் முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

நடவடிக்கைகள்	தொழிற்பாடுகள்
A. தொழிற்பிரிப்பு	1. திட்டமிடல்
B. ஊழியர் ஊக்கப்படுத்தல்	2. ஒழுங்கமைத்தல்
C. நியமங்களை உருவாக்குதல்	3. தலைமை வகித்தல்
D. சூழல்சார் பகுப்பாய்வு	4. கட்டுப்படுத்தல்

நிறுவன நடவடிக்கைகளின்படி முகாமைத்துவத் தொழிற்பாடுகள் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4
(2) A - 2, B - 1, C - 4, D - 3
(3) A - 3, B - 4, C - 2, D - 1
(4) A - 2, B - 3, C - 4, D - 1
(5) A - 4, B - 3, C - 2, D - 1 (.....)

28. கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் நடவடிக்கைகளுடன் நேரடியாகத் **தொடர்புபடாத** தரப்பினர்

(1) பட்டியற்படுத்திய கம்பனிகள்
(2) கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்
(3) தரகுத்தொழில் கம்பனிகள்
(4) நம்பிக்கை வங்கிகள்
(5) பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு (.....)

29. சாதாரண பங்கு மூலதனம், ஒதுக்கங்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையிலும் பார்க்கக் கடன் மூலதனம் குறைவாகக் காணப்படும்போது அவ்விகிதமானது எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

(1) உயர் இணைப்பு விகிதம்
(2) முதலீட்டின் மீதான திரும்பல் விகிதம்
(3) தாழ் இணைப்பு விகிதம்
(4) விரைவு விகிதம்
(5) நடைமுறை விகிதம் (.....)

30. நேர் மற்றும் அக நிதி மூலம் ஒன்று

(1) பங்கு வழங்கல்
(2) வங்கிக் கடன்கள்
(3) தொகுதிக்கடன் வழங்கல்
(4) நிறுத்தி வைத்த இலாபங்கள்
(5) குத்தகை (.....)

Download Past Papers at : www.freebooks.lk

2.1.3. வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.

வினா இலக்கம்	விடை	வினா இலக்கம்	விடை
01.	5	16.	4
02.	5	17.	2
03.	3	18.	3
04.	2	19.	2
05.	4	20.	3
06.	3	21.	4
07.	5	22.	2
08.	2	23.	4
09.	3	24.	2
10.	4	25.	2
11.	5	26.	2
12.	4	27.	4
13.	3	28.	2
14.	3	29.	3
15.	3	30.	4

அட்டவணை 05

சரியான ஒரு விடைக்கு 02 புள்ளி வீதம் மொத்தம் 60 புள்ளிகள்

Download Past Papers at : www.freebooks.lk

2.1.4 வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானம் :



வரைபு 05
வினாப்பத்திரங்களில் குறைந்த சதவீதமொன்றை 05 ஆம் வினாவிற்கே சரியான துலங்களைக் காட்டி உள்ளனர். இதன் இலகுதன்மை 30% சதவீதமாகும்

Download Past Papers at : www.freebooks.lk

2.1.5 வினாத்தாள் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கான தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்)

வினா இலக்கம்	சரியான தெரிவு	ஒவ்வொரு தெரிவையும் தெரிவு செய்யப்பட்ட மாணவர் சதவீதங்கள்					
		1	2	3	4	5	Missing
1	5	1%	15%	7%	2%	75%	-
2	5	12%	2%	23%	3%	59%	-
3	3	4%	1%	49%	18%	28%	-
4	2	6%	86%	6%	1%	1%	-
5	4	5%	20%	32%	30%	12%	1%
6	3	0%	1%	94%	0%	4%	-
7	5	2%	6%	3%	4%	86%	-
8	2	2%	88%	1%	8%	0%	-
9	3	6%	2%	85%	4%	4%	-
10	4	1%	1%	2%	93%	4%	-
11	5	10%	5%	4%	5%	76%	-
12	4	3%	5%	22%	65%	6%	-
13	3	3%	10%	70%	13%	3%	-
14	3	5%	11%	74%	4%	7%	-
15	3	1%	2%	89%	6%	2%	-
16	4	8%	5%	5%	59%	22%	-
17	2	8%	75%	2%	9%	6%	-
18	3	12%	17%	68%	3%	1%	-
19	2	20%	58%	15%	6%	1%	-
20	3	5%	9%	46%	29%	12%	-
21	4	1%	34%	2%	59%	3%	-
22	2	10%	75%	3%	4%	8%	-
23	4	3%	12%	7%	74%	4%	-
24	2	1%	79%	5%	2%	12%	
25	2	2%	87%	7%	2%	3%	-
26	2	2%	39%	31%	11%	16%	-
27	4	2%	3%	11%	73%	11%	-
28	2	4%	64%	8%	18%	6%	-
29	3	17%	8%	70%	2%	3%	-
30	4	14%	4%	5%	76%	2%	-

அட்டவணை 06

* ஒவ்வொரு வினாக்களின் கீழும் சரியான விடைத் தெரிவினைத் தெரிவுசெய்துள்ள மாணவர் சதவீதங்களை நிறம் தீட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது.

* வினாக்களுக்கான தெரிவினைத் தெரிவு செய்யாத அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட தெரிவுகளைத் தெரிவு செய்துள்ள மாணவர்களின் சதவீதங்களையே Missing என்பதன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

* வினாத்தாள் I இன் வினா இலக்கம் 01 தொடக்கம் 30 வரை விடையளிக்கும்போது,

உதாரணம் : 06 ஆவது வினாவிற்காக விண்ணப்பதாரிகளில் கூடுதலான சதவீதமொன்றை அதாவது 94% வீதத்தினர் சரியான துலங்கலை வெளிப்படுத்தியுள்ளனர்.

Download Past Papers at : www.freebooks.lk

2.1.6 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முடிவும் ஆலோசனைகளும் :

1-30 வரையிலான பல்தேர்வு வினாக்களில் அவதானம் செலுத்தும்போது வினா இலக்கம் 3, 5, 20, 26 ஆகிய வினாக்களின் இலகுதன்மை 50% சதவீத்தை விடக் குறைவாகும். இவ்வினாக்களுக்குரிய அலகுகளும் ஒவ்வொறு வினாக்களின் இலகுதன்மையும் பின்வருமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாட அலகு	வினா இலக்கம்	இலகுதன்மை
வணிக அடிப்படைகள்	03	49%
வணிக அடிப்படைகள்	05	30%
வியாபாரம்	20	46%
மனிதவள முகாமைத்துவம்	26	39%

வினா இலக்கம் 03 (அலகு - வணிக அடிப்படைகள்)

இவ்வினாவின் சரியான விடையான தெரிவு 3 த் தெரிவுசெய்துள்ள விண்ணப்பதார்கள் 49% ஆன மாணவர்கள் மட்டுமாகும். 28% சதவீதத்தினர் 5 ஐந்தாவது நிரலையும் 18% சமவீதத்தினர் 4 ஆவது நிரலையும் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவைச் சிறந்த முறையில் வாசித்து விளக்கம் பெறப்படாமையும் எண்ணக்கரு தொடர்பாகக் காணப்பட்ட தெளிவற்ற நிலைமையுமே இவ்வாறு விண்ணப்பதாரிகளில் கூடுதலான பிரிவினர்கள் பிழையான நிரலைத் தெரிவு செய்வதற்கான காரணமாகும். இதனால் சிறந்த முறையில் வினாவினை வாசித்து விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதோடு விடையளிப்பதற்கு விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி பழக்கங்களை ஏற்படுத்துவதுடன் பாட ரீதியான எண்ணக்கரு தொடர்பாக விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதில் அவர்களை ஈடுபடுத்துதல் வேண்டும்.

வினா இலக்கம் 05 (அலகு - வணிக அடிப்படைகள்)

இவ்வினாவின் சரியான விடையான 4 ஆவது நிரலை 30% சதவீதமான விண்ணப்பதாரிகள் மட்டுமே தெரிவுசெய்திருந்தனர். 3 வது நிரலை 32% சதவீதத்தினர் தெரிவு செய்திருந்தனர். உரிய விடய ஆய்வைச் சிறந்த முறையில் அறிந்து விடய ஆய்விற்குரிய விடையை வழங்கப்படாதிருந்தமையே இவ்வாறு கூடுதலான பிரிவினர் பிழையான விடையைத் தெரிவு செய்திருந்தமைக்குக் காரணமாகும்.

வினா இலக்கம் 20 (அலகு - வியாபாரம்)

இவ்வினாவின் சரியான விடையான 3 ஆம் நிரலைத் தெரிவுசெய்த விண்ணப்பதாரிகள் 46% சதவீதம் மட்டுமாகும். இனையத்தினூடுவழி முறையில் (Online purching) பொருள் கொள்வனவு செய்யும் முறை தொடர்பாகச் செயன்முறை ரீதியான அறிவின்றிருத்தலே இவ்வாறு கூடுதலான பிரிவினர் பிழையான நிரலைத் தெரிவு செய்வதற்குக் காணரமாகும். இது தொடர்பாகச் செயன்முறை ரீதியிலான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரிகளை ஈடுபடுத்துதல் வேண்டும். வியாபாரத்தின்போது பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப முறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் தொடர்ச்சியான அவதானத்தைச் செலுத்துவதில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

வினா இலக்கம் 26 (அலகு - மனிதவள முகாமைத்துவம்)

இவ்வினாவின் சரியான விடையான 2 ஆம் நிரலை விண்ணப்பதாரிகளில் 39% சதவீதத்தினர் மட்டுமே தெரிவு செய்துள்ளனர். 3 ஆவது நிரலை 31% சதவீதத்தினர் தெரிவு செய்துள்ளனர். தலைமைத்துவத் தேர்ச்சிகளை மேம்படுத்திக் கொள்வதற்கு உரிய பயிற்சி முறை தொடர்பாக விண்ணப்பதாரிகள் விளக்கம் பெற்றிருக்காமையே இவ்வாறு கூடுதலான பிரிவினர் பிழையான நிரலைத் தெரிவு செய்வதற்குக் காரணமாகும். எனவே வினாவினைச் சிறந்த முறையில் வாசித்துச் சரியான விடையில் பிரவேசிப்பதற்கு விண்ணப்பதாரிகளைப் பயிற்சி பழக்கங்களை ஏற்படுத்துதல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

2.1.7 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களும் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

- இலக்கம் 31 இருந்து 40 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும்போது **பொருத்தமான பதங்களையிட்டு** இடைவெளிகளை நிரப்புக.

31. (அ) சந்தையானது ..... மற்றும் ..... முறைகளில் கூட உருவாக்கப்பட்பட முடியும்.

(ஆ) நுகர்வோர் பொருளின் விலை, தரம் மற்றும் பாங்கு (Style) என்பவற்றை ஒப்பிட்டு கொள்வனவு செய்யும் பொருட்கள் ..... பொருட்கள் என அழைக்கப்படுவதுடன் விசேட முயற்சிகள் எதுவும் எடுக்காமல் அடிக்கடி கொள்வனவு செய்யும் பொருட்கள் ..... பொருட்கள் என அழைக்கப்படும்.

விடைகள்

(அ) பௌதிக ரீதியாக (Physically)
இலத்திரனியல் ரீதியாக / வெளி ரீதியாக (Electronically / Virtually)

(ஆ) கடை (Shopping)
வசதி (convenience)

32. (அ) நிறுவனமொன்றினது உடைமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்களது நம்பிக்கைகள் விழுமியங்கள் மற்றும் மனப்பாங்குகள் போன்ற பலவற்றின் மீதான அடிப்படையில் அந்நிறுவனம் சார்ந்த ..... உருவாக்கப்படுகின்றது.

(ஆ) இலங்கை மத்திய வங்கியானது அரசாங்கத்துக்கான குறுங்காலக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக ..... வழங்குவதுடன் நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக ..... வழங்குகின்து.

விடைகள்

(அ) கலாசாரம் (Culture)

(ஆ) திறைசேரி முறிகள் / பிணைகள் (Treasury bonds)

33. (அ) பங்குடமை ஒன்று எழுத்து வடிவில் அல்லது ..... அல்லது ..... கூட உருவாக்கப்பட முடியும்.

(ஆ) கம்பனிகள் தமது ..... மீதும் பங்குதாரர்களது .... மீதும் என அவை செலுத்தும் இரு வருமான வரிகளும் இரட்டை வரிவிதிப்பு (Double Taxation) என அழைக்கப்படும்.

விடைகள்

(அ) வாய்மொழி மூலம் (Oraly)
நடத்தை மூலம் (Inference / Implied)

(ஆ) இலாபங்கள் / மொத்த இலாபங்கள் (Profit / Total profits)
பங்கிலாபங்களின் (Dividend)

Download Past Papers at : www.freebooks.lk

34. (அ) பின்வரும் கூற்றுகள் தொடர்பில் சரி, பிழையைக் குறிப்பிடுக.

கூற்று	**சரி / பிழை**
1. தனியுடைமை வணிகமானது தனது பெயரில் வருமானவரியைச் செலுத்துகின்றது.	:.....
2. இடர்கள் ஏற்றுக்கொள்ளுதல் முயற்சியாண்மையின் ஒரு குணவியல்பு ஆகும்.	:.....
3. தரவு மற்றும் தகவல் ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு கிடையாது.	:.....
4. மொத்த உற்பத்திக் கிரயத்தை உற்பத்தி செய்ம அலகுகளின் எண்ணிக்கையால் பிரிப்பதன் மூலம் அலகொன்றின் உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பட முடியும்.	:.....

விடைகள்

1. பிழை
2. சரி
3. பிழை
4. சரி

35. (அ) காசோலை ஒன்று தொடர்பில் நடைமுறைக் கணக்கை வைத்திருப்பவர் ..... எனப்படும் அதேவேளை காசோலையின் மீது எவருடைய பெயர் எழுதப்படுகின்தோ அந்நபர் ..... ஆவார்.

(ஆ) குறுங்கால (தற்காலிக) மேலதிக பற்று வசதிகளை ..... பிணையின் மூலம் பெற்றுக்கொள்ள முடிவதுடன் நீண்டகால (நிரந்தர) மேலதிகப் பற்று வசதிகளை ..... பிணையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

விடைகள்

(அ) வரைபவர் (Drawer)
பெறுபவர் (Payee)

(ஆ) தனிநபர் (Personal)
ஆதனம் (Property)

36. (அ) நிதி நிறுவனங்களின் வகைப்படுத்தலின்படி ஊழியர் நம்பிக்கை நிதியம் ஒரு ..... சேமிப்பு நிறுவனமாகக் காணப்படும் அதேவேளை முயற்சி மூலதனக் கம்பனிகள் (Venture capital companies) ..... நிதி நிறுவனங்களாகக் காணப்படும்.

(ஆ) இலத்திரனியல் பணக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்போது அட்டை உடைமையாளர், வணிகர், ... மற்றும் ..... ஆகிய தரப்பினர் சம்பந்தப்படுவர்.

விடைகள்

(அ) ஒப்பந்தம் (Contractural)
ஏனைய விசேட (Other special)

(ஆ) கடனட்டைச் சங்கம் (Credit card Association)
வழங்கும் நிறுவனம் / வங்கி (Issuing Organization / Bank)

Download Past Papers at : www.freebooks.lk

37. (அ) மோட்டார் வாகனங்கள், அதில் பயணிக்கும் பயணிகள், வெளித்தரப்பினர் மற்றும் சகல ஆதனங்களுக்குமான சேதங்கள் ..... காப்புறுதிப் பத்திரத்தின் மூலம் உள்ளடக்கப்படுவதுடன், வெளித்தரப்பினருக்கும் ஆதனங்களுக்குமான சேதங்கள் மட்டும் ..... காப்புறுதிப் பத்திரத்தின் மூலம் உள்ளடக்கப்படுகின்றது.

(ஆ) உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திப் பொருட்களைத் தானாகவே ஏற்றுமதி செய்வது ..... முறை என அழைக்கப்படுவதுடன் வெளித்தரப்பினர் மூலம் ஏற்றுமதி செய்வது ..... முறை என அழைக்கப்படும்.

விடைகள்

(அ) பூரண / அகல்விரிவான (Full / Comprehensive)
ஆகக் குறைந்தது மூன்றாம் நபர் (Minimum third party)

(ஆ) நேர் (Direct)
நேரில் / முகவர் / தரவாணை (Indirect / Agent / Indent)

38. (அ) அறிவுசார் புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் புத்தகங்களுக்கான சட்ட ரீதியான உரிமை ..... என அழைக்கப்படுவதுடன் புத்தாக்கம் ஒன்றின் தற்காலிக தனியுரிமைக்கான சட்ட ரீதியான உரிமை ..... என அழைக்கப்படும்.

(ஆ) வணிகமொன்றின் பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களுக்கான வெவ்வேறு பண்டக்குறிப் பெயர்களது (Separate brand names) பாவனை ..... பண்டக்குறி என அழைக்கப்படுவதுடன், கம்பனி ஒன்றின் உற்பத்திக் பொருள் வரிசைக்கான ஒரு ஒற்றைப் பண்டக்குறிப் பெயரின் (Single brand names) பாவனை ..... பண்டக்குறி என அழைக்கப்படும்.

விடைகள்

(அ) பதிப்புரிமை (Copy right)
ஆக்க உரிமை (Patent)

(ஆ) உற்பத்திப் பொருள் (Product)
குடும்பம் (Family)

39. (அ) ஒருவரால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு பின்பற்றுவோர் மூலம் அமுல்படுத்தப்படுவது .... தலைமைத்துவம் என அழைக்கப்படுவதுடன், தீர்மானங்கள் சகலரினதும் பங்குபற்றுதல் மூலம் எடுக்கப்பட்டு பின்வற்றுவோர் மூலம் அமுல்படுத்தப்படுவது .... தலைமைத்துவம் என அழைக்கப்படும்.

(அ) நிறுவனமொன்றின் முகாமையாளர் ஒருவர் அவரது அறிவு, திறன்கள் ஆகியவற்றின் மூலம் ..... வலுவைக் கொண்டிருப்பதுடன் ஊழியர்களுக்குத் தூண்டுதலை ஏற்படுத்தத்தக்க வகையில் ..... வலுலைக் கொண்டிருப்பார்.

விடைகள்

(அ) சர்வாதிகார (Autocratic)
ஜனநாயக (Democratic)

(ஆ) நிபுணத்துவ (Expert)
வெகுமதி (Reward)

Download Past Papers at : www.freebooks.lk

40. வணிகமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பொருத்தமான மனிதவள முகாமைத்துவத் தொழிற்பாட்டுப் பணியை தரப்பட்டுள்ள இடைவெளியில் எழுதுக.

நடவடிக்கைகள்	**மனிதவள முகாமைத்துவப் பணி**
1. புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கான பத்திரிகை விளம்பரமொற்றை வெளியிடல்	:.....
2. விண்ணப்பதாரிகளின் பொது அறிவை மதிப்பிடுவதற்காக எழுத்துப் பரீட்சை நடத்துதல்	:.....
3. புதிய ஊழியரொருவர் வேலையில் ஈடுபடுவதன் மூலம் வேலைப்பணிகளைக் கற்றுக் கொள்ளல்	:.....
4. ஊழியர்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கான புள்ளித்திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்	:.....

விடைகள்

(1) ஆட்சேர்ப்பு / கவர்தல் (Recruitment / Attraction)
(2) தெரிவுசெய்தல் (Selection)
(3) பயிற்சி / வேலையின் போதனப்பயிற்சி (Training / On the job training)
(4) செயற்றிறன் மதிப்பீடு (Performance Evaluation)

- **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குப் **பொருத்தமான விடைகளை** எழுதுக.

41. வணிகம் ஒன்றுக்கு அதன் ஆரம்பம் முதல் இறுதிவரை பல்வேறு வகையான ஆதரவுச் சேவைகள் தேவைப்படுகின்றன. இலங்கையில் அவ்வாறான சேவைகளை வழங்கும் அரசாங்கக் கட்டமைப்பு மட்டங்கள் **நான்கைப்** பெயரிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

விடைகள்

1. மத்திய அரசு
2. மாகாண சபை
   * 3 ஆம் 4 ஆம் விடைகளுக்கு பின்வருவனவற்றுள் ஏதாவது இரண்டை எழுதினால் புள்ளி வழங்கவும்.
   * உள்ளூராட்சி மன்றங்கள் / மாநகர சபை / நகர சபை / பிரதேச சபை

42. வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் சந்தை அளவைப்பாய்வை () மேற்கொள்ளும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** பிரதான காரணிகளை எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....

Download Past Papers at : www.freebooks.lk

விடைகள்

- வாடிக்கையாளர்கள் தொடர்பாக
- போட்டியாளர்கள் தொடர்பாக
- சமூககலாசார காரணிகள் தொடர்பாக
- புவியியல் பிரதேசம் தொடர்பாக / இலக்குச் சந்தை தொடர்பாக
- உற்பத்திப் பொருள் வகை தொடர்பாக
- விலை தொடர்பாக

43. வழங்குனர்கள் வணிகமொன்றுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய **நான்கு** வழிகளை எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....

விடைகள்

- உரிய நேரத்தில் பொருட்கள் வழங்காமை.
- தரமான பொருட்களை வழங்காமல் விடுதல்.
- வழங்கலுக்காக நியாயமற்ற நிபந்தனைகளை விதித்தல்.
- விலைகள் தொடர்பான பேரம்பேசல்கள்.
- தொடர்ச்சியாகப் போதுமான அளவு பொருட்களை வழங்காமை.
- வழங்குனரிடையே காணப்படும் ஒன்றுபட்டதன்மை (Cratels) (ஒற்றுமை) / வழங்குனர்களின் தொழிற்சங்கச் செயற்பாடுகள்.

44. இலங்கை தர நிறுவகத்தனால் நியமங்களை அமுல்படுத்தும்போது பயன்படுத்தப்படும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

விடைகள்

- சுயேச்சையான தரங்களை உருவாக்கல் மற்றும் செயற்படுத்துதல்.
- SLS சான்றிதழ் வழங்கும் முறைகள்
- ஏற்றுமதிக்கு முன்னரான பரிசோதனை முறைகள்
- இறக்குமதிப் பரிசோதனை முறைகள்
- கடல் உணவுப் பொருட்களுக்கான பரிசோதனை முறைகள் (HACCP)

Download Past Papers at : www.freebooks.lk

45. திட்டங்களைத் தயாரிக்கும்போதுள்ள **நான்கு** தத்துவங்களை எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....

விடைகள்

- நிறுவனத்தின் நோக்கம், இலக்கு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.
- பிரயோக ரீதியாக நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
- நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இருத்தல்.
- இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாகக் காணப்படுதல்.
- குறித்த காலவரையறையை கொண்டதாக இருத்தல்.
- ஏனைய முகாமைத்துவ கருமங்களுக்கு வழிகாட்டியாக இருத்தல் / ஏனைய முகாமைத்துவக் கருமங்களுக்கு இடையில் ஒழுங்கிணைப்பு
- அனைத்து மட்டங்களிலும் உள்ள முகாமையாளர்களாலும் விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும் திட்டமிடலில் பங்குபற்றக் கூடியதாகவும் இருத்தல்.

46. ஆகக்கூடிய சரக்கிருப்பு மட்டத்தைக் கணப்பிடும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** காரணிகளை எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....

விடைகள்

- மறு கட்டளை மட்டம் (Re Order Level)
- ஆகக் குறைந்த இருப்புப் பாவனை (Minimum Usage)
- விநியோகக் காலம் / ஆகக் குறைந்த கட்டளைக் காலம் (Lead time / minimum order period)
- மறு கட்டளைத் தொகை / சிக்கனக் கட்டளைத் தொகை (Re Order Quantity / EOQ)

47. பின்வரும் குறியீடுகள் மூலம் இனங்காணப்படுவது யாது?

1. பதிவு செய்யப்பட்ட வியாபாரக்குறி / வியாபாரக்குறி (Registered Trade mart / Trade mart)
2. யூரோ நாணயம் (Euro Currency)
3. SAARC அமைப்பு (South Asia Association of Regional corparation)
4. உலக வங்கி (World Bank)

Download Past Papers at : www.freebooks.lk

48. நுகர்வோர் நோக்கில் இருந்து, சந்தைப்படுத்தற் கலவையின் உள்ளடங்கும் **நான்கு** மாறிகளையும் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

விடைகள்

1. நுகர்வோர் தேவை, விருப்பம் (Consumers Needs and Wants)
2. செலவு / கிரயம் (Cost)
3. வசதி அல்லது சௌகரியம் (Convenience)
4. தொடர்பாடல் (Commiunication)

49. தகவல் முறைமை ஒன்றின் **நான்கு** பிரதான தொழிற்பாடுகளையும் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

விடைகள்

1. உள்ளீடு (Input)
2. செயன்முறை (Processing)
3. வெளியீடு (Output)
4. களஞ்சியப்படுத்தல் (Storing)

50. நிதித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான **நான்கு** தெவைப்பாடுகளை எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....

விடைகள்

- வணிகத் தொழிற்பாடுகளுக்குத் தேவையான நிதியின் அளவைத் தீர்மானிப்பதற்கும் அதற்கான மூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கும்.
- வணிகத்தின் நிதியை முதலீடு செய்வது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு.
- நிதிப் பற்றாக்குறை ஏ்படக் கூடிய காலங்களை இனங்கண்டு அதனைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு.
- நிதி மிகை ஏற்படக் கூடிய காலங்களை இனங்கண்டு அதனைப் பயனுள்ள வகையில் முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு.

Download Past Papers at : www.freebooks.lk

2.1.8 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பு



வரைபு 06

Download Past Papers at : www.freebooks.lk

2.1.9 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் :

வினா இலக்கம்	புள்ளிகள் பெற்ற சதவீதம்					
	புள்ளிகள் 0	புள்ளிகள் 0.5	புள்ளிகள் 1	புள்ளிகள் 1.5	புள்ளிகள் 2	துலங்களை வெளிக்காட்டாத
31	12%	12%	30%	14%	31%	-
32	28%	8%	32%	4%	27%	1%
33	6%	13%	23%	27%	30%	1%
34	1%	1%	7%	35%	56%	-
35	17%	23%	42%	11%	6%	1%
36	15%	32%	22%	18%	11%	2%
37	13%	11%	25%	22%	29%	1%
38	20%	19%	22%	17%	20%	2%
39	28%	14%	33%	16%	6%	2%
40	26%	18%	18%	22%	12%	3%
41	73%	5%	6%	4%	8%	4%
42	21%	24%	32%	18%	4%	2%
43	12%	10%	23%	29%	23%	2%
44	53%	13%	9%	8%	13%	5%
45	46%	10%	10%	13%	18%	4%
46	34%	14%	17%	14%	16%	3%
47	37%	30%	19%	9%	3%	2%
48	42%	6%	6%	11%	32%	3%
49	40%	10%	6%	11%	31%	2%
50%	48%	23%	17%	7%	3%	3%

அட்டவணை 07

* வினாத்தாள் I இல் இலக்கம் 31 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்குப் புள்ளிகள் பெறப்பட்டுள்ள சதவீதங்களை புள்ளிகள் 0, புள்ளிகள் 0.5, புள்ளிகள் 01, புள்ளிகள் 1.5 புள்ளிகள் 02 எனும் நிரல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

* வினாக்களுக்கு விடையளிக்கப்படாத விண்ணப்பதாரிகளின் சதவீதங்களையே துளங்கல்களை வெளிக்காட்டாத எனும் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

  உ-ம் :- விண்ணப்பதாரிகளில் 56%சதவீதத்தினர் வினா இலக்கம் 34 க்குக் கூடுதலான புள்ளிகள் பெறப்பட்டுள்ளதோடு விண்ணப்பதாரிகளில் குறைந்த சதவீதமொன்றை அதாவது 47, 50 ஆகிய வினாக்களுக்கு 3% சதவீதம் கொண்ட குறைந்த புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

Download Past Papers at : www.freebooks.lk

2.1.10 வினாத்தாள் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும், ஆலோசனைகளும் :

31 தொடக்கம் 50 வரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடையளித்தலுக்கான வினாக்களை எடுத்து நோக்கும்போது வினா இலக்கம் 39, 41, 42, 44, 45, 46, 47, 50 ஆகிய வினாக்களின் இலகுதன்மை 40% சதவீதத்தை விடக் குறைவானதாகும்.

வினா இலக்கம் 39 (அலகு - முகாமைத்துவம்)

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது விண்ணப்பதாரிகளில் 28% சதவீதத்தினர் எவ்விதப் புள்ளிகளும் பெறப்படவில்லை. 6% சதவீதத்தினர் மட்டுமே முழுமையான புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தலைமைத்துவப் பாணியைப் போன்று முகாமையாளரொருவருக்குத் தலைவரொருவர் எனும் வகையில் கருமமாற்றுவதற்கு அதிகாரம் கிடைக்கப்பெறும் பல்வேறு முறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளிடம் சரியான விளக்கமொன்றில்லாததே இதற்குரிய காரணமாகும். கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளின்போது இவ்விடயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

வினா இலக்கம் 41 (அலகு - அரசும் வணிகமும்)

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது விண்ணப்பதாரிகளில் 73% சதவீதத்தினர் எவ்விதப் புள்ளிகளும் பெறப்படவில்லை. விண்ணப்பதாரிகளில் 8% சதவீதத்தினர் மட்டுமே பூரணமான புள்ளிகள் பெறப்பட்டுள்ளனர். வினாவினைச் சரியான முறைப்படி விளங்கிக் கொள்ளாமையின் காரணமாக அரச நிர்வாகக் கட்டமைப்புகள் நான்கையும் சரியாகப் பெயரிடுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு முடியாமல் போனமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். எனவே வணிகத்திற்குத் துணைச் சேவைகளை வழங்கும் அரச நிர்வாகக் கட்டமைப்புகள் தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளின்போது கோட்பாட்டு ரீதியாகவும் செயன்முறை ரீதியாகவும் விளக்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வினா இலக்கம் 42 (அலகு - சந்தைப்படுத்தல் முகாமைத்தும்)

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது விண்ணப்பதாரிகளில் 21% சதவீதத்தினர் எவ்விதப் புள்ளிகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. விண்ணப்பதாரிகளில் 4% சதவீதத்தினர் மட்டுமே முழுமையான புள்ளிகளைப் பெறப்பட்டுள்ளனர். விண்ணப்பதாரிகள் வினாவின் கருப்பொருளான வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் சந்தையினை ஆய்வு செய்யும்போது பிரதானமாகக் கவனம் செலுத்தவேண்டிய விடயம் தொடர்பாகச் சிறந்த தெளிவொன்று இல்லாதிருந்தமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். மரபு ரீதியான விடையளிப்பதற்குப் புரம்பாகச் சந்தைப்படுத்தல் சந்தர்ப்பங்களை இனங்காண்பது தொட்டு நுகர்வாளர் திருப்தியை இனங்காணுதல் வரையிலான பல்வேறு படிமுறைகளின்போது சந்தை ஆய்வு செய்தல் தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவினைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

வினா இலக்கம் 44 (அலகு - அரசும் வணிகமும்)

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது விண்ணப்பதாரிகளில் 53% சதவீதத்தினர் எவ்விதப் புள்ளிகளும் பெறப்படவில்லை. விண்ணப்பதாரிகளினுள் 13% சதவீதத்தினர் மட்டுமே முழுமையான புள்ளிகள் பெறப்பட்டுள்ளர். 5% சதவீத்தினர் துலங்களை வெளிப்படுத்தாதுள்ளனர். நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக நேரடியாகக் கருமமாற்றும் நிறுவனங்களின் பணிகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளினுள் விளக்கமற்றிருப்பதே இதற்குரிய காரணமாகும். இந்நிறுவனங்களும் அவற்றின் கருமங்களும் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அனுபவத்தையும் தெளிவையும் உயர்த்துவதற்காகக் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளின்போது கவனத்தைச் செலுத்துவது மிக முக்கியமானதாகும்.

Download Past Papers at : www.freebooks.lk

வினா இலக்கம் 45 (அலகு - முகாமைத்துவம்)

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது விண்ணப்பதாரிகளில் 46% சதவீதத்தினர் எவ்விதப் புள்ளிகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. 18% சதவீதத்தினர் மட்டுமே முழுமையான புள்ளிகளும் பெறப்பட்டுள்ளனர். திட்டமிடல் தொடர்பாக விண்ணப்பதாரிகலினுள் விளக்கமற்றிருத்தலே இவ்வாறான குறைவான அடைவு நிலையை ஏற்படுவதற்குக் காரணமாகும். கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளின் போது திட்டமிடல் தொழிற்பாடுகள் தொடர்பாக விரிவான தெளிவொன்று விண்ணப்பதாரிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

வினா இலக்கம் 46 (அலகு - செயற்பாட்டு முகாமைத்துவம்)

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது விண்ணப்பதாரிகளில் 34% சதவீதத்தினர் எவ்வதப் புள்ளிகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. விண்ணப்பதாரிகளுள் 16% சதவீதத்தினர் மட்டுமே முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். உச்ச இருப்பு மட்டத்தைக் கணிப்பிடப்படும் சமன்பாட்டினை அறிந்திருந்தாலும் கூட அதனைக் கணிப்பிடும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய காரணிகள் அச்சமன்பாட்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது என விண்ணப்பதாரிகளுள் விளக்கமொன்று இல்லாதிப்பதே இதற்குரிய காரணமாகும். இருப்பு மட்டத்தைக் கணிப்பிடுவதைப் போன்று அக்கணிப்பிடலை மேற்கொள்வதற்காகப் பிரயோகிக்கப்படும் சமன்பாட்டில் உள்ளடங்கும் காரணிகள் தொடர்பாகவும் வழிகாட்டுதலொன்றை வகுப்பறையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

வினா இலக்கம் 47 (அலகு - வியாபாரம்)

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது விண்ணப்பதாரிகளுள் 37% சதவீதத்தினர்களினால் எவ்விதப் புள்ளிகளும் பெற்றுக்கொள்ளப்படமுடியவில்லை. 36% சதவீதத்தினர் மட்டுமே விண்ணப்பதாரிகளுள் முழுமையான புள்ளிகளையும் பெற்றுள்ளனர். வணிகப்பாடத்துறையோடு தொடர்புடைய நியமக் குறியீடுகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளிடத்தில் குறைந்த மட்டத்திலான அறிவே காணப்பட்டிருந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் பிரயோகப்படும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சமிக்ஞைகளும் குறியீடுகளும் தொடர்பான அறிவு நிலைத்திருக்குமாறு வகுப்பறையில் பல்வேறு வெளிப்பாடுகளைப் பிரயோகிப்பதன் மூலம் இது தொடர்பான விளக்கத்தினை நிலைபெறக்கூடியதாக்க முடியும்.

வினா இலக்கம் 50 (அலகு - வணிகத்திட்டம்)

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது விண்ணப்பதாரிகளில் 48% சதவீதத்தினர் எவ்விதப் புள்ளிகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. 3% சதவீதத்தினர் மட்டுமே முழுமையான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். நிதித்திட்டமொன்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தை உறுதியாகச் சுட்டிக் காட்டுவதற்கு முடியாமல் போனதே இவ்வாறு குறைந்த இலகுதன்மையைப் பெற்றுக் கொள்வதற்குக் காரணமாகும். கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது நிதித்திட்டமொன்றை செயல்முறைரீதியாகத் தயாரிப்பதில் விண்ணப்பதாரிகளை ஈடுபடுத்துதல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

2.2 வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்களாகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.
இவ்வினாப்பத்திரமானது இரு பிரிவுகளைக் கொண்டது.

I ஆம் பகுதி - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்கள் 4 ஆகும்.
II ஆம் பகுதி - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்கள் 4 ஆகும்.

* ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் குறைந்தது இரு வினாக்கள் வீதம் தெரிவு செய்து 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

* ஒரு வினாவிற்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

* இரு வினாப்பத்திரத்திற்குமான இறுதிப் புள்ளிக் கணிப்பீடானது

I ஆம் வினாத்தாளுக்கான புள்ளிகள் = 100
II ஆம் வினாத்தாளுக்கான புள்ளிகள் = 100
இறுதிப் புள்ளிகள் = 200 ÷ 2
= 100

Download Past Papers at : www.freebooks.lk

2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும்

வினாத்தாள் II இல் ஒவ்வொரு வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டமை தொடர்பான அவதானிப்புக்கள், வரைபடங்கள் 2, 3, 4.1, 4.2, என்பவற்றின் அடிப்படையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. வினாக்களுக்கு உரிய வரைபடங்கள் அவ்வவ் வினாவினதும் அவதானிப்புக்கள், முடிவுகள் என்பவற்றுடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பகுதி I

வினா இலக்கம் - 01

1. (i) (அ) வணிகமொன்றின் அடிப்படைத் தொழிற்பாடுகள் (நடவடிக்கைகள்) நான்கைக் குறிப்பிடுக.

(i) உற்பத்தி / செயற்பாடு
(ii) நிதி / கணக்கியல்
(iii) சந்தைப்படுத்தல்
(iv) நிர்வாகம்
(v) மனிதவளம்
(vi) ஆய்வும் அபிவிருத்தியும்
(vii) முகாமைத் தகவல் முறைமை

(4 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) வாடிக்கையாளர்களும் போட்டியாளர்களம் தனித்தனியே வணிகமொன்றுக்கு எவ்வாறு வாய்ப்பாகவும் அச்சுறுத்தலாகவும் அமைவார்கள் என்பதனை எடுத்துக்காட்டக்கூடியவாறு ஒவ்வோர் உதாரணம் வீதம் எழுதுக.

வணிகமொன்றுக்கு வாடிக்கையாளர்கள்

வாய்ப்பாக அமைதல் :

(i) வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.
(ii) வாடிக்கையாளரின் செலவிடத்தக்க வருமானம் அதிகரித்தல்.
(iii) வாடிக்கைளரின் வாழ்க்கைப் பாங்கு (Life Style) மாற்றம்.
(iv) வாடிக்கையாளரின் ஒழுங்குபடுத்தும் அறிவுப் பற்றாக்குறை
(v) பொருட்களுக்கிடையே மாறுவதற்கான கிரயம் அல்லது செலவு அதிகமானதாகக் காணப்படுதல்.
(vi) சந்தை மற்றும் பொருட்கள் தொடர்பான வாடிக்கையாளரின் அறிவுப்பாற்றாக்குறை.

(1 விடயத்திற்கு ½ புள்ளி)

அச்சுறுத்தலாக அமைதல் :

(i) வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைவடைதல்.
(ii) வாடிக்கையாளர்களின் செலவிடத்தக்க வருமானம் குறைவடைதல்.
(iii) வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளர்களால் அதிகளவிலான கொள்வனவு.
(iv) வாடிக்கையாளரின் ஒழுங்குபடுத்தும் அறிவு அதிகரித்தல்.
(v) பொருட்களுக்கிடையே மாறுவதற்கான கிரயம் அல்லது செலவு குறைவானதாகக் காணப்படுதல்.
(vi) சந்தை மற்றும் பொருட்கள் தொடர்பான வாடிக்கையாளரின் அறிவு அதிகரித்தல்.

(1 விடயத்திற்கு ½ புள்ளி)

Download Past Papers at : www.freebooks.lk

வணிகமொன்றுக்கு போட்டியாளர்கள்

வாய்ப்பாக அமைதல் :

(i) போட்டியாளர்களின் நிதி பற்றாக்குறை.
(ii) போட்டியாளர்களின் திறனற்ற சந்தைத் தந்திரோபாயம்.
(iii) சந்தையில் இருந்து போட்டியாளர்கள் வெளியேறுதல்.
(iv) பொட்டியாளர்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவை குறைவடைதல்.

(1 விடயத்திற்கு ½ புள்ளி)

அச்சுறுத்தலாக அமைதல் :

(i) அதிக போட்டியாளர்கள் சந்தையில் காணப்படுதல். (நிதி பம், சந்தைப்படுத்தல் தந்திரோபாயம் அதிகரித்தல்)
(ii) போட்டியாளர்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவை அதிகரித்தல்.
(iii) புதிய போட்டியாளர்கள் சந்தையில் உட்பிரவேசித்தல். அல்லது பதிலீட்டு உற்பத்திகள் சந்தையில் அதிகரித்தல்.
(iv) சந்தையில் இருந்து விலகிச் செல்லத் தடைகள் காணப்படுதல்.

(1 விடயத்திற்கு ½ புள்ளி)
(04 புள்ளிகள்)

(ii) (அ) வணிகர் ஒருவர் வங்கியல் இருந்து பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுமிடத்து அது வங்கிக்கும் வணிகருக்கும் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பைக் குறிப்பிடுக.

வங்கிக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு :

(i) நிதி நெருக்கடி ஏற்படும்.
(ii) வங்கியின் நிதியாற்றல் குறைவடைதல் / கடன் வழங்கும் ஆற்றல் குறைவடைதல்.
(iii) கடனை வசூலிக்கும்போது மேலதிக செலவுகள் ஏற்படும்.
(iv) மத்திய வங்கிக்கு வங்கியின் மீதான நன்மதிப்பு மற்றும் பிரதியை குறைவடையும்.
(v) பங்குச் சந்தையில் வங்கின் பங்குகளுக்கு விலை குறைவடையும் (தனியார்துறை வங்கியாயின்)

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

வணிகருக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு :

(i) சமூகத்தில் நம்பிக்கை / விசுவாசம் குறைவடையும்.
(ii) சமூகத்திலவ் நன்மதிப்புக் குறைவடையும்.
(iii) வேறு நிதி நிறுவனங்களிடம் இருந்து கடனைப் பெற முடியாது போகும்.
(iv) பிணையாளர்களினால் பிரச்சினைகள் தோன்றும்.
(v) வங்கியால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது இருவருக்கு அதிக செலவுகள் ஏற்படும்.
(vi) நிறுவனம் நிலைத்திருப்பது கடினம்.

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) நிறுவன கலாசாரத்தின் பலம், பலவீனம் ஆகியவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருவதன் மூலம் விளக்குக.

நிறுவன கலாசாரத்தின் பலம் :

(i) விசுவானமான ஊழியர்கள் அதிகரித்தல்.
(ii) நிறுவனத்திற்குள் ஒத்த தன்மை காணப்படுதல்.
(iii) சமூகத்தினால் இனங்காணப்படுவதை ஸ்தாபிக்க முடிதல்.
(iv) ஊழியர்களின் நடத்தைகள் நிறுவன காலாசரத்திற்கு ஏற்ப காணப்படுதல்.

(1 விடயத்திற்கு 01 புள்ளி)

நிறுவன கலாசாரத்தின் பலவீனம் :

(i) தொழில் தருனர் - தொழில் பெறுனரிடையேயான முரண்பாடுகள்.
(ii) ஒருவரின் தனிப்பிட்ட எண்ணங்கள் மற்றும் நடத்தைகளில் வரையறை காணப்படுதல்.
(iii) உப கலாசாரம் உருவாகுதல்.
(iv) பொருத்தமற்ற கலாசார செயற்பாடுகளினால் ஊழியர் நடத்தகைள் மாறுபடுதல்.

(1 விடயத்திற்கு 01 புள்ளி)
(04 புள்ளிகள்)

(iii) பின்வரும் பேரண்டச் சூழல் காரணிகளுக்கிடையிலான இடைத்தொடர்பை ஒவ்வொன்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருவதன் மூலம் சுருக்கமான விளக்குக.

(அ) இயற்கைச் சூழல் - சமூக கலாசாரச் சூழல்

இயற்கைச் சூழலில் ஏற்படும் பாதிப்பு சமூக சலாசார சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தும். மாறாக சமூக கலாசார செயற்பாடுகளால் இயற்கைச் சூழலில் பாதிப்பு ஏற்படுகின்து.
உதாரணம் : மனித செயற்பாடுகள் - சூழல் பாதிப்பு

(விளக்கத்திற்கு 01 புள்ளி)
(உதாரணத்திற்கு 01 புள்ளி)

(ஆ) அரசியற் சூழல் - பொருளாதாரச் சூழல்

அரசியல் சூழல் நடவடிக்கைகளால் பொருளாதாரச் சூழலில் தாக்கம் ஏற்படுகின்ற அதேவேளை பொருளாதாரச் சூழல் காரணிகளால் ஏற்படும் பாதிப்புக்கள் அரசியல் சூழலில் தாக்கத்தை ஏற்டுத்துகின்றன.
உதாரணம் : வரி விதிப்பு - விலை அதிகரப்பபு

(விளக்கத்திற்கு 01 புள்ளி)
(உதாரணத்திற்கு 01 புள்ளி)

Download Past Papers at : www.freebooks.lk

(iv) (அ) ஊழியர்களின் நோக்கில் தொழில்தருனர்கள், ஊழியர்கள் சார்பாக தம் பொறுப்புக்களை நிறைவேற்றவில்லையெனக் கருதத்தக்க இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(i) வேலைகளைச் சரியாகப் பிரித்து வழங்காமை தொடர்பில் / தொழில்களைச் சரியாக வழங்காமை தொடர்பில்
(ii) பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பில்
(iii) சம்பள அளவுத்திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பில்
(iv) பயிற்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்வது தொடர்பில்
(v) செயற்றிறன் மதிப்பீடு மேற்கொள்ளப்படாமை தொடர்பில்
(vi) தொழிலில் நிரந்தரத் தன்மையை ஏற்படுத்திக் கொடுக்காமை தொடர்பில்
(vii) ஊழியர்களுக்கான பிற நலன்களை வழங்காமை தொடர்பில்

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் பேரூந்து நடத்துனர் ஒருவரும் பயணி ஒருவரும் பேரூந்தில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் இரண்டு வீதம் எழுதுக.

பயணிகளால் :

(i) உரிய கட்டணத்தைச் செலுத்திப் பிரயாணச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுதல்.
(ii) ஏனையோருக்கு இடையூறுகளைச் செய்யாமல் ஒழுக்கமான முறையில் நடந்துகொள்ளுதல்.
(iii) மதகுருமார், அங்கவீனர்கள், கர்ப்பிணித் தாய்மார், வயோதியர் போன்றோருக்குரிய இருக்கைகளை வழங்குதல்.
(iv) பேரூந்துக்கு சேதம் விளைவிக்காமை

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

பேரூந்து நடத்துனரால் :

(i) பிரயாணிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாமல் மரியாதையாக நடந்து கொள்ளுதலும் கதைத்தலும்.
(ii) பயணிகளுக்கான மீதிப் பணத்தைச் சரியான வழங்கதல்.
(iii) உதவி தேவையானோருக்குத் தேவையான உதவிகளை வழங்கதல்.
(iv) பேரூந்து வண்டியைத் தூய்மையாக வைத்திருத்தல்.

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

(v) இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்றான தேயிலைக் கைத்தொழிலின் மூலமான பொருளாதாரப் பங்களிப்பு படிப்படியாகக் குறைந்து செல்வதற்கான இரண்டு பிரதான காரணங்கரள விபரிக்குக.

(i) தொடர்ச்சியான காலநிலை மாற்றம்.
(ii) ஊழியர்களும் முதலீட்டாளர்களும் தேயிலைத் தொழில் துறையில் இருந்து விலகுதல்.
(iii) தேயிலைப் பயிருக்குப் (தேநீருக்குப்) பதிலாக வேறு பானங்கள் அறிமுகம் செய்யப்பட்டமை.
(iv) பல்வேறு நாடுகளின் செல்வாக்குக் காரணமாக சர்வதேச மட்டத்தில் கேள்வி குறைவடைந்தமை.
(v) தேயிலை உற்பத்தியாளர்களுக்கான நிதி மற்றும் ஏனைய பிரச்சினைகள்.
(vi) உற்பத்திச் செலவு அதிகரித்தல்.
(vii) குறைந்தளவான உற்பத்தித்திறன்.

(இரண்டு காரணங்களைக் குறிப்பிட 02 புள்ளிகள்)
(இரண்டு காரணங்களை விளக்க 02 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

1 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



வினாத்தாள் II இல் I ஆம் பகுதியிலிருந்து கூடுதலான மாணவர் தொகையினர் தெரிவுசெய்துள்ள வினா இதுவாகும். 99% சதவீதத்தினர் 1 ஆம் வினாவைத் தெரிவு செய்துள்ளனர். (வரைபு 02) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் கிடைக்கப்பெறும்.

இதில் புள்ளிகள் 00 - 05 ஆயிடையில் 7% மும்
புள்ளிகள் 06 - 10 ஆயிடையில் 31% மும்
புள்ளிகள் 11 - 15 ஆயிடையில் 42% மும்
புள்ளிகள் 16 - 20 ஆயிடையில் 20% மும்

எனப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாவிற்கான புள்ளிகள் 11 அல்லது அதிலும் கூடியதாக 62% சதவீதத்தினர் பெற்றுள்ளதுடன் விண்ணப்பதாரிகளினுள் 38% சதவீதத்தினர் 10 அல்லது அதிலும் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய பிரிவுகள் மற்றும் உபபிரிவுகள் 10 இனுள் இலகுதன்மை கூடுதலான உபபிரிவு (iv) (ஆ) வாக இருப்பதோடு அதன் இலகுதன்மை 78% சதவீதமாகும். அதேபோன்று குறைவான இலகுதன்மை (iii) (அ) உபபிரிவாக இருப்பதோடு அதன் இலகுதன்மை 39% சதவீதமாகும் எனவும் ஏனைய வினாப்பிரிவுகளின் இலகுதனமை தொடர்பாகவும் இவ்வரைபின் மூலம் தெளிவாக இனங்காணக்கூடியதாக இருக்கின்றது.

Download Past Papers at : www.freebooks.lk

1 ஆம் வினாவின் (ii) (ஆ) துணைப்பிரிவின் இலகுதன்மை 46% சதவீதமாகும். விண்ணப்பதாரிகள் வினாவினைச் சரியாக விளங்கிக் கொள்ளாமையே இவ்வாறு இலகதன்மை குறைவதற்குக் காரணமாகும். அதாவது அமைப்புக் கலாசாரத்தினுள் காணப்படும் பலன்கள், பலவீனங்கள் என்பன தொடர்பாக விண்ணப்பதாரிகள் சரியான விளக்கமொன்று பெற்றிருக்கவில்லை. விண்ணப்பதாரிகள் வினாவினைச் சிறந்த முறையில் வாசித்து அதன் உள்ளடக்கத்தினை விளங்கிக் கொள்வதில் ஈடுபடுத்துதல் வேண்டும். அமைப்புக் கலாசாரத்தில் காணப்படும் பல்வேறு அடிப்படைக் கூறுகள் எவை என்பதைச் சரியாக விளக்கம் பெற்றிருக்க வேண்டி இருப்பதோடு அந்தந்த அடிப்படைக் கூறுகளை பலன்கள், பலவீனங்கள் எனும் வகையில் செயற்படும் முறையினை உதாரணங்ளோடு விளக்குதல் வேண்டும். இதற்காக எழுத்து மூல ஒப்படைகளைப் பிரயோகிப்பது பொருத்தமானது.

1 ஆம் வினாவின் (iii) (அ) உபபிரிவின் இலகுதன்மை 39% சதவீமாகும். இயற்கைச் சூழலுக்கும் சமூகக் கலாசாரச் சூழலுக்குமிடையே காணப்படும் இடைத்தொடர்புகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளினுள் தெளிவான விளக்கமொன்றின்மையே இப்பிரிவின் இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். இயற்கைச் சூழலின் வாழ்தன்மை சமூகக் கலாசாரச் சூழலின் அடிப்படையிலேயே தங்கி இருக்கின்றது எனக் கற்றல் - கற்பித்தல் செயல் முறைகளின்போது உதாரணங்ளோடு தெளிவுபடுத்திக் கொடுத்தல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

2 ஆம் வினா

2. (i) (அ) "அரசாங்கமானது பல்வகைப்பட்ட வரிகளை விதிக்கின்றது" இவ்வாறு வரிகளை விதித்தல் வணிகங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைச் சுருக்கமாக விளக்குக.

(i) பொருள்கள் சேவைகளின் விலை அதிகரிப்பினால் கேள்வி குறைவடையும்.
(ii) மூலப்பொருள் விலை அதிகரிப்பினால் உற்பத்திச் செலவு அதிகரிக்கும்.
(iii) விற்பனையின் அளவும் வருமானமும் குறைவடையக் கடன் பெற வேண்டிய நிலை ஏற்படும்.
(iv) மீள் முதலீடு குறைவடையும்.
(v) வரி அறவிடுவதனால் சில தொழிற்துகைள் மூடப்பட சில தொழிற்துறைகள் பாதுகாக்கப்படும்.
(vi) உற்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கான ஆற்றல் அரசுக்கு உருவாதல்.

(4 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) நாணயக் கொள்கையை அமுல்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கியால் கடன் நிபந்தனைகள் விதிக்கப்படுவதற்கான நோக்கங்கள் இரண்டை விளக்குக.

(i) பண நிரம்பலைக் கட்டுப்படுத்தல்.
(ii) பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தல்.
(iii) தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கான முதலீட்டுத் தீர்மானத்தை மேற்கொள்ளல் / ஊக்கமிழக்கச் செய்தல்.
(iv) வங்கி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல்.

(2 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(2 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(04 புள்ளிகள்)

(ii) (அ) நுகர்வோரின் உரிமையை உறுதிப்படுத்துவதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு அனுகூலங்களை விளக்குக.

(i) ஊழியர்களை இலகுவாகக் கவர்ந்து கொள்ளல்.
(ii) விற்பனையின் அளவு அதிகரிக்கும்.
(iii) இலாபம் அதிகரிக்கும்.
(iv) நிறுவனத்தின் நன்மதிப்பு மற்றும் பிரதிமை (Image) என்பன அதிகரிக்கும்.
(v) நுகர்வோர் முறைப்பாடுகள் குறைவடையும்.
(vi) விரயங்கள் அழிவுகள் குறைக்கப்படும் / தரமான உற்பத்தி இடம்பெறம்.

(2 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(2 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) நபர் ஒருவர் தனது மகளின் பெயரைப் பயன்படுத்தி "யசோதா உணவு விற்பனைச் சேவை" என்ற ஒரு வணிகத்தை ஆரம்பிப்பின் அதற்குப் பிரயோகிக்கத்தக்க சட்ட ரீதியான தேவைப்பாடு எது?

வியாபார பெயர் பதிவுச் சட்டத்தின் (1918 ஆம் ஆண்டின்) கீழ் **பிரதேச செயலகத்தில்** பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(சட்டத்தைக் குறிப்பிட 01 புள்ளி)
(பிரதேச செயலகம் என எழுத 01 புள்ளி)

(iii) (அ) பங்குடமை வணிகத்தை ஆரம்பிப்பதிலும் பார்க்க தனியுடைமை வணிகத்தை ஆரம்பிப்பது சிறந்ததாகும் என நபரொருவர் கருதினார். இக்கருத்துடன் உடன்படுவதற்கான இரண்டு காரணங்கள் தருக.

(i) ஒப்பீட்டளவில் இலகுவாக ஆரம்பிக்கலாம்.
(ii) சுதந்திரமாகத் தீர்மானம் எடுக்கலாம்.
(iii) இலாபத்தைத் தனியொருவரே அனுபவிக்கலாம்.
(iv) வியாபார இரகசியங்கள் பாதுகாக்கப்படும்.
(v) அர்ப்பணிப்புடன் வியாபாரத்தை நடாத்துவதனால் வியாபாரம் விரிவடையும்.
(vi) வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்தலாம்.

(2 விடயங்களுக்கு 1 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றுடன் ஒப்பிடுகையில் வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றின் இரண்டு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

(i) பங்குதாரர் வரையறுக்கப்பட்டதால் மேலதிக மூலதனம் இன்மை.
(ii) கடன் மூலதனத்திற்கான வரையறைகளின் காரணமாக அதிக மூலதனத்தைத் திரட்ட முடியாது.
(iii) மேலதிக மூலதனங்களைத் திரட்டுவதற்காக பொது மக்களுக்குப் பங்குகளை விற்பனை செய்ய முடியாது.
(iv) கம்பனிப் பதிவாளரின் கட்டுப்பாடுகள் குறைவாகக் காணப்படுவதனால் தவறுகள் / மோசடிகள் அதிகளவில் ஏற்படலாம்.

(2 விடயங்களுக்கு 1 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(iv) பொதுமக்கள் மத்தியில் கூட்டுறவு இயக்கங்களைப் பிரபல்யமடையச் செய்வதற்கு நீர் பிரேரிக்கக்கூடிய நான்கு ஆலோசனைகளை விளக்குக.

(i) அங்கத்தவர்களின் நலன்களை அதிகரித்தல்.
(ii) இளைஞர்களை அதிகளவில் கூட்டுறவுத் துறையில் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளுதல்.
(iii) மக்கள் மத்தியில் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
(iv) போக்குவரத்து, வைத்தியசாலை போன்ற புதிய மற்றும் நவீன வியாபார சேவைகளை விஸ்தரித்தல்.
(v) புதிய விற்பனை மேம்படுத்தல் முறைகளை பயன்படுத்துதல்.
(vi) கூடுதலான நேரம் வியாபாரக் கருமங்களில் ஈடுபடுத்தல்.
(vii) புதிய தொழிநுட்ப முறைகளை அறிமுகஞ் செய்தல்.
(viiii) ஊழியர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் பயிற்சியித்தல்.

(4 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(4 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(v) "ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முயற்சியாண்மை பங்களிப்புச் செய்கின்றது". உதாரணங்கள் தருவதன் மூலம் இருக்கத்தை விளக்குக.

1. புதிய வணிகங்கள் உருவாவதனால் புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகின்றன.
2. புதிய பொருட்கள் சந்தைக்கு வருவதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பதுடன் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும்.
3. புதிய பொருட்களுக்கான சந்தை விரிவாக்கத்தின் காரணமாகப் போட்டிச் சந்தை உருவாகும்.
4. பிரதேச வளங்களின் பாவனை அதிகரிப்பதனால் அவற்றுக்கான கேள்வி அதிகரிக்கும். இது பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

(மேற்குறிப்பிட்ட 4 விடயங்களையும் உள்ளடக்கிய பூரண விடைக்கு 04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

2ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



2 ஆம் வினாவினை 87% சதவீதத்தினர் தெரிவுசெய்துள்ளனர். (வரைபு 02) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் கிடைக்கப்பெறும்.

இதில் புள்ளிகள் 00 - 05 ஆயிடையில் 10% மும்
புள்ளிகள் 06 - 10 ஆயிடையில் 32% மும்
புள்ளிகள் 11 - 15 ஆயிடையில் 39% மும்
புள்ளிகள் 16 - 20 ஆயிடையில் 19% மும்

எனப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாவுக்கான புள்ளிகள் 11 அல்லது அதனைவிடக் கூடுதலாக 58% சதவீதத்தினர் பெற்றுக்கொண்டுள்ளதோடு விண்ணப்பதாரிகளினுள் 42% சதவீதத்தினர் 10 அல்லது அதனைவிடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 08 இல் இலகுதன்மை குறைந்த பிரிவு (iii) (அ) பிரிவாக இருப்பதோடு அதன் இலகுதன்மை 91% சதவீதமாகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த பிரிவாக (i) (ஆ) வாக இருப்பதோடு அதன் இலகுதன்மை 43% சதவீதமாகும். ஏனைய வினாப்பகுதிகளின் இலகுதன்மை தொடர்பாகத் தகவல்களை இவ்வரைபின் மூலம் தெளிவாகின்றது.

Download Past Papers at : www.freebooks.lk

2ஆம் வினாவின் (i) (அ) உபபிரிவின் இலகுதன்மை 47% சதவீதமாகும். வினாவின் மூலம் எதிர்பார்க்கப்பட்டவாறு வரி விதிப்பு வணிகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும்கூட தாக்கத்தை ஏற்படுத்தும் முறை தொடர்பாக விளக்குவது தேவையான அளவில் முன்வைப்பதற்கு முடியாமல் போனதே இவ்வினாவின் இலகுதன்மை கீழ் மட்டத்திற்குச் செல்வதற்கு காரணமாகும். வினாவின் மூலம் தெளிவுபடுத்துதல் எதிர்பார்க்கப்பட்டாலும்கூட காரணங்கள் மட்டுமன்றி அவற்றைச் சுருக்கமாக விளக்குவதற்கு விண்ணப்பதாரிகளுக்குச் சிறந்த பரிட்சயமொன்றைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

இரண்டாம் வினாவின் (i) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 43% சதவீதமாகும். நிதிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது இலங்கை மத்திய வங்கி பயன்படுத்தும் ஒவ்வொரு கருவிகளும் அவற்றின் நோக்கங்கள் தொடர்பாக விரிவான விளக்கமொன்றை விண்ணப்பதாரிகளுள் இல்லாதிருந்தமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். எனவே நிதிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது இலங்கை மத்திய வங்கி பயன்படுத்தப்படும் ஒவ்வொரு உபகரணங்கள் அவற்றின் நோக்கங்கள் என்பன தொடர்பாக விரிவான வகையில் விண்ணப்பதாரிகளுக்கு அறிவூட்டச் செய்தல் வேண்டும்.

இரண்டாவது வினாவின் (iii) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 48% சதவீதமாகும். வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியுடன் ஒப்பிடும்போது வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றில் காணப்படும் பிரதிகூலங்களைச் சுட்டிக் காட்டுவதற்குப் பிதலாக இவ்விரு கம்பனிகளினதும் வேறுபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருத்தலே இவ்வாறு இலகுதன்மைக் குறைவதற்குக் காரணமாக அமைந்தது. கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளின்போது வணிக அமைப்புக்களின் பண்புகள் வேறுபாடுகள் என்பன போன்று வணிக அமைப்புக்களின் பண்புகள் காரணமாக இடம்பெறும் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியாக ஒப்பீடு செய்யும் அறிவினையும் விளக்கத்தினையும் விண்ணப்பதாரிகளுக்கிடையிலே மேம்படுத்தல் வேண்டும்.

இரண்டாவது வினாவின் (iv) பகுதியின் இலகுதன்மை 46% சதவீதமாகும். கூட்டுறவு வணிகம் (Coporation Moment) எனும் எண்ணக்கரு தொடர்பாக விண்ணப்பதாரிகளுள் சரியான விளக்கமொன்று இல்லாதிருப்பதும் விடையானது தெளிவுபடுத்தப்பட்டிருப்பதனாலும் இவ்வாறான குறைவான அடைவு நிலைமையொன்று ஏற்படுவதற்குக் காரணமாகும். எனவே கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளின்போது கூட்டுறவு மற்றும் கூட்டுறவு வணிகம் எனும் இருபதங்களின் வேறுபாடுகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளை அறிவூட்டச் செய்தல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

3 ஆம் வினா

3. (i) (அ) தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் வணிகமொன்றை வாங்குவதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(i) ஆரம்பத்தில் இருந்தே சந்தை ஒன்று காணப்படுதல்.
(ii) இலாபமும் வருமானமும் உழைக்கலாம்.
(iii) பயிற்றப்பட்ட ஊழியர் காணப்படல்.
(iv) குறைந்த முயற்சியுடன் பலமான மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
(v) முன்னைய வணிகத்தின் நன்மதிப்பு மற்றும் பிரதிமையைப் பயன்படுத்தலாம்.

(மேற்குறிப்பிட்ட 4 விடயங்களையும் உள்ளடக்கிய பூரண விடைக்கு 04 புள்ளிகள்)

(ஆ) முயற்சியாண்மைத் திறன்கள் நான்கை விபரிக்குக.

(i) தன்னம்பிக்கை
(ii) அர்ப்பணிப்பு
(iii) போட்டித்தன்மை
(iv) ஆக்கத்தன்மை
(v) பிரச்சினைகளை தீர்த்தல்
(vi) தூண்டும் திறன்
(vii) தீர்மானம் எடுக்கும் திறன்
(viii) பல்திறன்கள்
(ix) சவால்களை ஏற்கும் ஆற்றல்
(x) வினைத்திறனுடன் செயற்படல்
(xi) ஏனைய திறன்கள்

(4 விடயங்களைக் குறிப்பிட 01 புள்ளி)
(4 விடயங்களை விளக்க 01 புள்ளி)
(04 புள்ளிகள்)

(ii) "பெருமளவிலான சிற்றளவு வணிகங்கள் மிகவும் குறுகிய காலத்தில் தோல்வியடைகின்றன." சிற்றளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கான நான்கு காரணங்களைத் தருவதன் மூலம் இக்கருத்தை விளக்குக.

(i) பற்றாக்குறையான முயற்சியாண்மை ஆற்றல்.
(ii) திறனற்ற முகாமை.
(iii) நிதிகளைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் கஸ்டம்.
(iv) உட்கட்டமைப்பு வசதிகளின் போதாமை.
(v) நவீன தொழிநுட்ப அறிவைப் பயன்படுத்தாமை.
(vi) போட்டியாளர்களின் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்க முடியாமை.
(vii) விற்பனையில் காணப்படும் பிரச்சினைகள்.
(viii) குடும்ப அங்கத்தவர்களிடையே முரண்பாடுகள் உருவாதல்.
(ix) சாத்தியப்பாடு தொடர்பாக அறியாது வணிகத்தை ஆரம்பித்தல்.

(4 விடயங்களைக் குறிப்பிட 02 புள்ளிகள்)
(4 விடயங்களை விளக்க 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(iii) (அ) சில வாடிக்கையாளர்கள் தன்னியக்க இயந்திர அட்டைகளை (ATM Cards) வைத்திருக்கின்ற போதிலும் பெரும்பாலானவர்கள் பணத்தை மீளப்பெறுவதற்காக வங்கிக் கருமபீடத்துக்குச் செல்கின்றார்கள் என அளவையாய்வு (Survey) ஒன்று வெளிப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் ATM அட்டைகளைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கான இரண்டு காரணங்களை எடுத்துக்காட்டுக.

(i) பயன்படுத்துவதில் போதிய அறிவு இல்லாமை / விழிப்புணர்ச்சியின்மை
(ii) மீளப்பெறும்போது பணம் அறவிபடப்படல் / மேலதிக செலவு
(iii) கொடுக்கல் வாங்கல்லில் நம்பிக்கைக் குறைவு
(iv) வங்கி வைப்புப் புத்தகத்தில் பதிவுகள் இடம்பெறாமை
(v) வழமையான வங்கிக் கரும பீடத்தில் பணத்தைப் பெறுவதில் தேர்ச்சி பெற்றிருத்தல்
(vi) இயந்திர செயற்பாடுகளை விட வங்கியோடு நேரடித் தொடர்பு வைத்திருப்பதில் உள்ள விருப்பம்
(vii) உச்ச வரையறைகள் காணப்படல் **(2 விடயங்களுக்கு 1 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)**

(ஆ) நிதிக் கம்பனிகளின் இரண்டு பணிகளைக் குறிப்பிட்டு, அவை வணிகங்களின் வளர்ச்சிக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதை விளக்குக.

(i) கடன்கள் வழங்கல்.
(ii) வாடகைக் கொள்வனவு வசதி.
(iii) குத்தகை நிதி வசதி.
(iv) வைப்புகளை ஏற்றல். **(2 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 01 புள்ளி)**
(2 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(04 புள்ளிகள்)

(iv) (அ) நடைமுறைக் கணக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் வணிகர்களுக்குக் கிடைக்கத்தக்க இரண்டு அனுகூலங்களை விளக்குக.

(i) காசோலை மூலமான கொடுக்கல் வாங்கல்
(ii) நிலையான கட்டளை கொடுக்கல் வாங்கல்
(iii) நேரடி வைப்பு
(iv) வங்கி மேரஹீலதிகப் பற்று வசதி
(v) வங்கிக் கூற்றைப் பெற்றுக்கொள்ள முடிதல்
(vi) ஏனைய சேவைகளுக்கான முன்னுரிமை
(2 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 1 புள்ளி)
(2 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 1 புள்ளி)

(ஆ) இன்று கையடக்கத் தொலைபேசிகள் பல்வேறுபட்ட பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. வணிக நடவடிக்கைகளுக்காகக் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடிய நான்கு சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்கள் தருக.

(i) கொள்வனவுக் கட்டளையைப் பெறுவதற்கு.
(ii) மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு.
(iii) கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு.
(iv) தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு.
(v) வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையே செய்திகளை அல்லது தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கு.
(vi) வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு.
(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(v) (அ) வாடிக்கையாளர் ஒருவர் வரவு அட்டையிலும் பார்க்க கடன் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு நன்மைகளை எழுதுக.

(i) கையில் காசு இல்லாவிடினும் வங்கிக் கணக்கைப் பயன்படுத்தாமல் பொருட்கள் மற்றும் சேவைகளையம் பணத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.
(ii) கழிவுகள் மற்றும் விலைக் குறைப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
(iii) குறிப்பிட்ட காலம் வரை செலுத்த வேண்டிய அவசியமியல்லை.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) காப்புறுதியின் மூலம் வணிக நிறுவனங்களுக்குக் கிடைக்கும் இரண்டு அனுகூலங்களை விபரிக்குக.

(i) குறைவான வணிக இடர்களுடன் முதலீட்டை ஊக்குவிக்கலாம். வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு உறுதியான ஒரு சேவையாக காணப்படுகின்றது.
(ii) சர்வதேச வியாபாரத்தின் வளர்ச்சி.
(iii) ஊழியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுவதனால் வணிகத்துக்கான நிதி இடர்கள் குறைவடைதல்.
(iv) உற்பத்திப் பொருள் காப்புறுதியின் மூலம் நுகர்வோருக்கு நன்மை ஏற்படுவதனால் வணிகம் விருத்தியடையும்.

(2 விடயங்களை விளக்க 1 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

3ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



3 ஆம் வினாவினை 83% சதவீதத்தினர் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் கிடைக்கப்பெறும். (வரைபு 02).

இதில் புள்ளிகள் 00 - 05 ஆயிடையில் 6% மும்
புள்ளிகள் 06 - 10 ஆயிடையில் 28% மும்
புள்ளிகள் 11 - 15 ஆயிடையில் 45% மும்
புள்ளிகள் 16 - 20 ஆயிடையில் 21% மும்

எனப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாவுக்கான புள்ளிகள் 11 அல்லது அதனைவிடக் கூடுதலாக பெறப்பட்ட தொகையினர் 66% சதவீதமாக இருப்பதோடு விண்ணப்பதாரிகளினுள் 34% சதவீதத்தினர் 10 அல்லது அதனைவிடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 09 இல் இலகுதன்மை கூடுதலான பிரிவு (i) (அ) வாக இருப்பதோடு அதன் இலகதன்மை 79% சதவீதமாகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த பிரிவு (v) (அ) வாக இருப்பதோடு அதன் இலகுதன்மை 48% சதவீதமாகும். ஏனைய வினாப்பிரிவுகளின் இலகுதன்மையை வரைபில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மூன்றாம் வினாவின் (v) (அ) உபபிரிவின் இலகுதன்மை 48% சதவீதமாகும். வரவட்டைகளுக்கு ஒப்பீட்டு ரீதியாகக் கடனட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நுகர்வாளரொருவருக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை முன்வைப்பதற்கு விண்ணப்பதாரிகளினால் முடியாமல் போனமையே இதன் இலகதன்மை குறைவதற்குக் காரணமாகும். ஆயினும் கடனட்டை, வரவட்டை என்பவற்றின் அனுகூலங்கள் பிரதிகூலங்களை அந்தந்த அட்டைகளுக்கு ஒப்பீட்டு ரீதியாகக் குறிப்பிட்டுக் காட்டுவதில் கற்றல் - கற்பித்தல் செயல்முறையின்போது கூடிய அவதானம் செலுத்த வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

4 ஆம் வினா

4. (i) இவ்வாண்டின் பாடசாலை விவாதத் தொனிப்பொருளட "வணிக வளர்ச்சிக்காக வீதி அபிவிருத்தியிலும் பார்க்க புகையிரதப் பாதையை அபிவிருத்தி செய்வது மிகவும் அனுகூலமானது" என்பதாகும். பாடசாலையில் விவாத அணியின் ஒரு அங்கத்தவரென்ற வகையில் தொனிப்பொருளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் நீர் முன்வைக்க எதிர்பார்க்கும் இரண்டு கருத்துகள் வீதம் விபரிக்குக.

ஆதரவாக :

(i) அதிகளவிலான பொருட்களைக் கொண்டு செல்லலாம்.
(ii) பெரியளவிலான பாதுகாப்பு (அழிவுகள் மற்றும் சேதங்கள் குறைவு)
(iii) பொருட்களின் தன்மைக்கு ஏற்ப புகையிரதப் பெட்களைப் பயன்படுத்தலாம்.
(iv) ஏனைய போக்குவத்தை விட செலவு குறைவு.
(v) சிற்றூண்டிச்சாலை, காட்சிகாண் கூடம், உறங்கலிருக்கை போன்ற பல்வேறு வசதிகளைப் பயன்படுத்தலாம்.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

எதிராக :

(i) பயணம் முடியும் வரை பொருட்களை எடுத்துச் செல்வதற்கு வேறு போக்குவரத்துச் சாதனங்களை பயன்படுத்த வேண்டியுள்ளதனால் செலவு அதிகம்.
(ii) தேவையான எந்நேரத்திலும் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாது.
(iii) மின்சார சமிக்ஞை தடைப்படுதல் போன்ற தொழிநுட்ப பிரச்சினைகளும் புகையிரதப் பாதையில் தடங்கல்களை ஏற்படுதலும்.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(ii) (அ) நேருக்கு நேரான வாய்மொழிமூலத் தொடர்பாடலினால் ஏற்படத்தக்க நான்கு பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(i) தொடர்பாலுக்கான அத்தாட்சி இன்மை.
(ii) அங்க அசைவுகளையும் செய்கைகளையும் தவறுதலாகப் புரிந்து கொள்ளல்.
(iii) மொழி அறிவுப் பிரச்சினை.
(iv) தோற்றத்தின் வெளிப்பாட்டினால் தகவல்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமை.
(v) நேருக்கு நேர் உரையாடுவதனால் உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டியிருத்தல் / கட்டுப்படுத்த முடியாதிருத்தல்.
(vi) முன் ஆயத்தம் இன்றித் தொடர்பாடுவதனால் தகவுகள் மற்றும் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படும்.

(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) இணையத்தின் மூலமான கடிதத்தொடர்புகளின் (தபாலின்) **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் எழுதுக.

அனுகூலங்கள் :

(i) விரைவான முறை.
(ii) குறைவான கிரயம்.
(iii) ஒரே தடவையில் செய்திகளைப் பலருக்கு அனுப்பலாம்.
(iv) வரைபுகள் மற்றும் படங்களை அனுப்பலாம்.
(v) அந்தரங்கத் தன்மையைப் பேணலாம்.
(vi) பின்னூட்டலை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
(vii) களஞ்சியப்படுத்தலாம்.
(viii) எந்த நேரத்திலும் தகவல்களை அனுப்பலாம்.
(ix) எழுத்துமூல ஆவணம்.

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

பிரதிகூலங்கள் :

(i) தொழிநுட்ப அறிவு அவசியம்.
(ii) பாதுகாப்பின்மையால் மோசடிகள் இடம்பெறலாம். (வேறு நபர்கள் பயன்படுத்தலாம்.)
(iii) தொழிநுட்பத் தவறுகள் மற்றும் பிரச்சினைகளால் தொடர்பாடலுக்கு தடை ஏற்படலாம்.
(iv) செய்திகளைப் பெறுவதற்கும் அனுப்புவதற்கும் இருதரப்பினருக்கும் இடையில் இணையத் தொடர்பை ஏற்படுத்தும் வசதி காணப்படுதல் வேண்டும்.

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(04 புள்ளிகள்)

(iii) (அ) விவசாய உற்பத்திகளின் விலை உயர்வுக்கு விவசாயிகளும் வணிகர்களும் பொறுப்புடையவர்களாவர் என்பதனை உதாரணங்கள் தருவதன் மூலம் விளக்குக.

விவசாயிகளின் மூலம் :

(i) அறுவடை, களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்தின்போது நவீன முறைகளைச் சரியாகப் பயன்படுத்தாமை காரணமாக உற்பத்தி குறைவடைதலினால்.
(ii) குறைவான உற்பத்தித்திறன் காணப்படுவதனால்.
(iii) உள்ளீடுகளுக்கான செலவுகள் அதிகரிப்பதனால்.
(iv) விவசாய அமைப்புக்களின் மூலம் விலை அதிகரிப்புகளை மேற்கொள்வதனால்.
(v) திட்டமிடுவதில் குறைபாடு.

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

வணிகர்களின் மூலம் :

(i) இலாபத்தை அதிகரிப்பதற்கும் நட்டத்தை ஈடு செய்வதற்குமான விலை அதிகரிப்புக்களை மேற்கொள்வதனால்.
(ii) வணிகர்களின் சங்கங்களின் மூலம் விலை அதிகரிப்புக்களை மேற்கொள்வதனால்.
(iii) முறையான களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தாமையின் காரணமாக பொருட்கள் சேதங்களுக்கு உள்ளாவதனால்.
(iv) அதிகளவான இடைநடுவர்கள் காணப்படும்போது விலைகள் அதிகரிப்பதனால்.
(v) முறையற்ற வகையில் இருப்புக்களைச் சேகரித்தல்

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) சர்வதேச சந்தையில் நுழையும்போது உள்நாட்டு வணிகர்கள் முகங்கொடுக்க நேரிடும் நான்கு இடையூறுகளை விபரிக்குக.

(i) தீர்வை மற்றும் இறுப்புக்கள் விதிக்கப்படுதல்.
(ii) இறக்குமதி நாட்டின் / சுங்கச் சட்டதிட்டங்கள்
(iii) ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு / அனுமதிப் பங்கு முறை
(iv) இறக்குமதி கட்டுப்பாட்டு / அனுமதிப் பங்கு முறை
(v) மொழி, காலாசார முரண்பாடு
(vi) பொருட்களின் தரங்களிலான மாற்றங்கள்
(vii) வழங்குனர்களை / இறக்குமதியாரைப் பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினை
(viii) உயர்வான போட்டித்தன்மை
(ix) வியாபார ஒப்பந்தங்களில் காணப்படும் தடைகள்
(x) வெளிநாட்டுச் செலாவணியின் ஏற்ற இறக்கங்கள்

(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(iv) சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் வணிகங்களுக்குக் கிடைக்கக்கூடிய **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் விளக்குக.

அனுகூலங்கள் :

(i) சந்தை விரிவாக்கம் / குறித்தவொரு சந்தையைப் பெற முடிதல்.
(ii) சர்வதேச உறவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
(iii) விலை ஏற்ற இறக்கத்துக்கு முகங்கொடுக்க முடிதல்.
(iv) வரிச் சலுகைகளைப் பெற முடிதல்.
(v) போட்டுக்கும் தீர்வை நடவடிக்கைகளுக்கும் முகங்கொடுக்கக்கூடியதாக இருத்தல்.

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

பிரதிகூலங்கள் :

(i) உடன்படிக்கையை ஏற்படுத்துவதாலும் தடைகள் குறைவடைவதாலும் போட்டி அதிகரித்தல்.
(ii) உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட விதிகளும் நிபந்தனைகளும் அடிபணிய வேண்டியிருத்தல்.
(iii) உடன்படிக்கைகள் முறிவடைவதனால் ஏற்படும் சட்டப் பிரச்சினை.
(iv) உள்நாட்டு ஆரம்பப்பருவக் கைத்தொழில்கள் சிதைவுறுதல்.

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(04 புள்ளிகள்)

(v) (அ) இலத்திரனியல் வர்த்தகத்தினால் வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(i) சந்தை விரிவடைதல்.
(ii) கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்தல்.
(iii) கொடுக்கல் வாங்கல்களுக்கான செலவு குறைவடைதல்.
(iv) 24 மணி நேரம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடிதல்.
(v) அதிக இடர்பரப்பு தேவையில்லை.
(vi) இடைநடுவர்கள் இல்லாமல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம்.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) இலத்திரனியல் வர்த்தகத்தினால் வாடிக்கையாளர் ஒருவருக்கும் கிடைக்கும் **இரண்டு** பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

(i) பௌதிக ரீதியாக பொருட்களைப் பரிசோதிக்க முடியாது.
(ii) கட்டளையிடப்பட்ட பொருட்கள் கிடைக்கும் என்பதில் உயுதியின்மை.
(iii) பயன்படுத்துவதில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

4ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



66% சதவீதத்தினர் 4 ஆம் வினாவினைத் தெரிவுசெய்துள்ளனர். (வரைபு 02) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் கிடைக்கப்பெறும். வினாத்தாள் II இல் 1 ஆம் பிரிவில் குறைந்த சதவீதமொன்றைப் பெற்றுள்ள வினாவும் இதுவாகும்.

இதில் புள்ளிகள் 00 - 05 ஆயிடையில் 10% மும்
புள்ளிகள் 06 - 10 ஆயிடையில் 38% மும்
புள்ளிகள் 11 - 15 ஆயிடையில் 40% மும்
புள்ளிகள் 16 - 20 ஆயிடையில் 12% மும்

எனப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாவுக்கான புள்ளிகள் 11 அல்லது அதனைவிடக் கூடுதலாகப் பெறப்பட்ட தொகையினர் 52% சதவீதமாக இருப்பதோடு விண்ணப்பதாரிகளினுள் 48% சதவீதத்தினர் 10 அல்லது அதனைவிடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 07 இல் இலகுதன்மை கூடிய பிரிவாக இருப்பது (ii) (ஆ) ஆக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 71% ஆகும். இலகுதன்மை குறைந்த உபபிரிவுகளாக (iii) (அ) மற்றும் (iv) பிரிவுகளாக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 42% ஆகும். ஏனைய வினாக்களின் இலகதன்மை வரைபில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Download Past Papers at : www.freebooks.lk

நான்காம் வினாவின் (iii) (அ) உபபிரிவின் இலகுதன்மை 42% சதவீதமாகும். விவசாய உற்பத்திகளின் விலை மட்டங்கள் உயர்வடைந்து செல்வதில் விவசாயிகளினதும் வியாபாரிகளினதும் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெறும் தாக்கம் தொடர்பாக நடைமுறை ரீதியான அறிவு விண்ணப்பதாரிகளிடம் காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். இதன் காரணமாகப் பொருளொன்றின் அல்லது சேவையொன்றின் விலையினைத் தீர்மானிக்கும்போது உற்பத்தியாளருக்கும் பங்களிப்புச் செய்யப்படும் அந்தந்தப் பிரிவினர்களின் நடவடிக்கைகளினால் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்கு நடைமுறை ரீதியான அறிவினைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

நான்காம் வினாவின் (iii) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 48% சதவீதமாகும். சர்வதேச வியாபாரத்திற்கு இருக்கின்ற தடைகள் தொடர்பாக செயல்முறை ரீதியிலான அறிவு விண்ணப்பதாரிகளிடம் இல்லாதிருப்பதே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். இத்தடைகள் தொடர்பாக விரிவாக முன்வைப்பதற்கு விண்ணப்பதாரிகளுக்கு முடியாமல் போயுள்ளது. இதனால் சர்வதேச வியாபாரத்தில் பிரவேசிக்கும்போது உள்நாட்டு வியாபாரிகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் தடைகள் தொடர்பான அறிவினையும் அவற்றை விரிவாக முன்வைக்கும் திறனையும் விண்ணப்பதாரிகள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

நான்காவது வினாவின் (iv) உபபிரிவின் இலகுதன்மை 42% சதவீதமாகும். வியாபார ஒப்பந்தங்கள் மூலம் வணிகங்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக விளக்குவதற்கு விண்ணப்பதாரிளுக்கு முடியாமல் போனமையே இவ்வாறான குறைந்த அடைவு நிலையொன்றை ஏற்படுவதற்குக் காரணமாகும். இதனால் சர்வதேச வியாபார ஒப்பந்தங்கள் மூலம் வணிகம், சமூகம் பொருளாதாரம் போன்ற பல்வேறு துறைகளுக்கு ஏற்படும் அழுத்தங்கள் தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளின்போது கவனத்தைச் செலுத்துவதில் ஈடுபடுத்தல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

பகுதி II

5 ஆம் வினா

5. (i) (அ) முகாமையாளரர் ஒருவரின் நபர்களுக்கிடையிலான (ஆளிடை) வகிபாகமொன்றைத் தெரிவுசெய்து, அவ்வகிபாகத்தில் நிறைவேற்ற வேண்டிய இரண்டு நடவடிக்கைகளை உதாரணங்களுடன் விபரிக்குக.

நபர்களுக்கிடையிலான வகிபாகம் (நடவடிக்கை)	**செயற்பாடுகள்**
மேலதிகாரி	சட்ட ரீதியான மற்றும் சமூக ரதியான கருமங்களின்போது நிறுவனத்தின் தலைவராகத் தோற்றுவார். உதாரணமாக : • புதிய தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்தல். • நிறுவனத்திற்கு வருகை தரும் பிரமுகர்களை வரவேற்றல். • நிறுவன அங்கத்தவர்களின் கூட்டம். • ஒப்பந்தங்களில் கையொப்பமிடல். • நிறுவனம் சார்பாக மரணச் சடங்குகளில் கலந்துகொள்ளுதல்.
தலைவர்	நிறுவன நோக்கத்தை அடைந்து கொள்வதற்காகத் தனக்குக் கீழுள்ள அதிகாரிகளை ஊக்கப்படுத்தலும் தூண்டுதலளித்தலும். உதாரணமாக : • ஊழியர்களின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல். • குறைநிறைகளை எடுத்துக் கூறல், • ஊழியர்களைப் பதவி உயர்த்துதல் மற்றும் பதவி நீக்குதல்.
தொடர்புகளைப் பேணுவர்	தகவல்களை வழங்கி வெளியகப் பிரிவினர் மற்றும் அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணிச் செல்லல். உதாரணமாக : • வாடிக்கைளாயர், வழங்குனர்கள், வியாபாரச் சங்கங்கள் போன்றவர்களுடன் தொடர்புகளைப் பேணல்.
(2 நடவடிக்கைகளை குறிப்பிட ½ புள்ளி) **(2 செயற்பாடுகளை உதாரணங்களுடன் குறிப்பிட 1½ புள்ளிகள்)** **(2 செயற்பாடுகளை உதாரணங்களின்றிக் குறிப்பிட 01 புள்ளி)**	

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) முகாமைசார் தீர்மானங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்குத் தேவையான இரண்டு காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(i) போதுமான அளவு வளங்களின் கிடைப்பனவு
(ii) போதிய அறிவு காணப்படுதல்
(iii) ஊழியர்களின் ஒத்துழைப்பு
(iv) பொருத்தமான வழிகாட்டலும் கட்டுப்பாடும்.
(v) பணிகளைச் சரியாக வழங்கக்கூடியதாக இருத்தல்.
(vi) தீர்மானங்களைச் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிவித்தல்.

(2 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(2 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(04 புள்ளிகள்)

(ii) (அ) வேலைச் சிறப்புத்தேர்ச்சியின் மூலம் ஊழியர் ஒருவருக்கு ஏற்படத்தக்க இரண்டு பிரதிகூலங்களை விபரிக்குக.

(i) சலிப்புத்தன்மை காரணமாகக் குறைவான உற்பத்தித்திறன்.
(ii) தொழில்சார்ந்த நோய்கள் ஏற்படுதல்.
(iii) வரையறுக்கப்பட்ட திறன்கள்.
(iv) வேறு தொழில் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாமை.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) "நிறுவனமொன்றின் வெற்றிக்குச் சிறந்த தலைமைத்துவமொன்று அத்தியாவசியமாகும்." இக்கருத்தை காரணங்கள் தந்து நியாயப்படுத்துக.

(i) நிறுவனத்தின் தூர நோக்கையும் இலக்குகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக அனைவரினதும் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு.
(ii) உயர்ந்த சாதனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு.
(iii) பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் ஊழியர்களுடை வெவ்வேறு கருமங்களை ஒன்றிணைந்து வழி நடாத்துவதற்கு.
(iv) நிறுவனத்தின் பல்வேறு உப பிரிவுகளுக்கிடையே தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கு.
(v) நிறுவனத்தின் கருமங்களைக் கட்டுப்படுத்துவதற்கு.
(vi) உதவியாளர்களின் தன்னம்பிக்கையினையும் மனோபலத்தையும் உதிப்படுத்துவதற்கு.

(2 விடயங்களைக் குறிப்பிட விளக்க 1 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(iii) (அ) உற்பத்திப் பொருள் தொடர்பான குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு பிந்திய மீளூட்டல் கட்டுப்பாட்டுக் கட்டத்தில் (Post feedback control stage) எடுக்கக்கூடிய இரண்டு நடவடிக்கைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(i) இயந்திரத்தைப் பழுதுபால்த்தல்.
(ii) இறுதி உற்பத்தியைப் பரிசீத்தல்.
(iii) தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
(iv) மூலப்பொருட்களை மாற்றி அமைத்தல்.
(v) உற்பத்தி செயன்முறைகளையும் மாற்றங்களையும் பரிசீலித்துத் தவறுகளைத் திருத்துதல்.

(2 விடயங்களுக்கு 1 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) உற்பத்தி முறையைத் தெரிவு செய்கையில் நிறுவனமொன்று கருத்திற்கொள்ள வேண்டிய நான்கு நியதிகளைக் குறிப்பிடுக.

(i) கட்டளைகள் அல்லது வெளியீட்டின் அளவை
(ii) உற்பத்திப்பொருள் வரிசையை / வீச்சை
(iii) உற்பத்தி செயன்முறையின் நெகிழ்வுத்தன்மையை
(iv) உற்பத்தியானது கட்டளைக்கா அல்லது இருப்புக்கா அல்லது சந்தைக்கா என்பதனை

(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(iv) (அ) வணிகமொன்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வெற்றியில் உற்பத்தி ஆய்வு அபிவிருத்தி தாக்கம் செலுத்தும் நான்கு விதங்களை விபரிக்குக.

(i) உற்பத்திப் பொருளின் தரத்தை உயர்த்துதல்.
(ii) உற்பத்திச் செயன்முறையின் வினைத்திறனை அதிகரித்தல்.
(iii) உற்பத்திக் கிரயத்தைக் குறைத்தல்.
(iv) புதிய பொருட்கள் சேவைகளை அறிமுகப்படுத்தல்.
(v) நுகர்வோரைத் திருப்திப்படுத்துதல்.
(vi) வள விரயங்களைக் குறைத்தல்.
(vii) இருக்கின்ற பொருட்கள் மேம்பாடடைதல்.

(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) பாய்ச்சல் உற்பத்தியின் இரண்டு சிறந்த பண்புகளைக் குறிப்பிடுக.

(i) அலகுக்கிரயம் குறைவு
(ii) பெரும்பாலும் நபர் ஒருவரால் உற்பத்திப் பாய்ச்சலைக் கட்டுப்படுத்த முடியும்.
(iii) முழுமையாக சந்தை தொடர்பாக கவனம் செலுத்த முடிதல்.
(iv) நவீன தொழினுட்ப வசதிகளை பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.
(v) நாளின் இறுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கம் வேலைகளைக் (WIP) காண முடியாது.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(v) (அ) சரக்கிருப்புக் கட்டுப்பாட்டின் மூலம் வணிகமொன்றுக்கு கிடைக்கத்தக்க இரண்டு அனுகூலங்களை விபரிக்குக.

(i) சரக்கு மிகை இன்மையால் தொழிற்படு மூலதனப் பிரச்சினை இன்மை.
(ii) சரக்கு பற்றாக்குறை இன்மையால் உற்பத்திச் செயற்பாட்டைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லலாம்.
(iii) அழிவுகள், விரயங்கள் இன்மையால் கிரயம் குறைவு.
(iv) களஞ்சியப்படுத்தல் செலவு குறைவு, கட்டளைச் செலவு, போக்குவரத்துச் செலவு என்பன குறைவடையும்.
(v) பொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலம் வாடிக்கையாளர் திருப்தி.
(vi) இயந்திர உபகரணங்கள் மற்றும் வளங்களில் இருந்து உச்சப் பயனைப் பெறலாம்.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) நிறுவனமொன்றின் ஊழிய உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்வதற்கான இரண்டு முறைகளைக் குறிப்பிடுக.

(i) ஊழியர்களை ஊக்கப்படுவத்துவதன் மூலம்.
(ii) ஊழியப் பயிற்சி அளித்தல் முறை.
(iii) புதிய தொழிநுட்பத்தின் மூலம்.
(iv) தரமான உள்ளீடுகளை பயன்படுத்துவதன் மூலம்.
(v) தீர்மானம் எடுப்பதில் ஊழியர்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல்.
(vi) ஊழியர் நலன்களை மேம்படுத்தல்.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

5ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



5 ஆம் வினாவினை 82% சதவீதத்தினர் தெரிவுசெய்துள்ளனர். (வரைபு 02) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் கிடைக்கப்பெறும்.

இதில் புள்ளிகள் 00 - 05 ஆயிடையில் 19% மும்
புள்ளிகள் 06 - 10 ஆயிடையில் 40% மும்
புள்ளிகள் 11 - 15 ஆயிடையில் 33% மும்
புள்ளிகள் 16 - 20 ஆயிடையில் 8% மும்

எனப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாவுக்கான புள்ளிகள் 11 அல்லது அதனைவிடக் கூடுதலாகப் பெறப்பட்ட தொகையினர் 41% சதவீதமாக இருப்பதோடு விண்ணப்பதாரிகளினுள் 59% சதவீதத்தினர் 10 அல்லது அதனைவிடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 10 இல் இலகுதன்மை கூடுதலான பிரிவு (ii) (அ) வாக இருப்பதோடு அதன் இலகுதன்மை 80% சதவீதமாகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த பிரிவாக (iii) (ஆ) வாக இருப்பதோடு அதன் இலகுதன்மை 19% சதவீதமாகும். ஏனைய உபபிரிவுகளின் இலகுதன்மை வரைபின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

Download Past Papers at : www.freebooks.lk

ஐந்தாம் வினாவின் (i) (அ) உபபிரிவின் இலகுதன்மை 49% சதவீதங்களாகும். தனி நபர்களுக்கிடையிலான வகிபாகத்தை உதாரணங்கள் மூலம் சுட்டிக்காட்டி விபரிப்பதற்கு விண்ணப்பதாரிகளுக்கு முடியாமல் போனமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். எனவே முகாமைத்துவ வகிபாக உதாரணங்களைக் குறிப்பிட்டு விரிவாக முன்வைக்கக் கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளைத் திட்டமிடல் வேண்டும்.

ஐந்தாம் வினாவின் (i) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 34% சதவீதமாகும். முகாமைத் தீர்மானங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான காரணிகளை விளக்குவதற்கு முடியாமல் போனமையே இவ்வாறு இலகதன்மை குறைவதற்குக் காரணமாகும். எனவே முகாமைத்துவத் தீர்மானங்கள் தொடர்பாகவும், அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான காரணிகள் தொடர்பாகவும் விரிவான விளக்கமொன்றை விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஐந்தாம் வினாவின் (iii) (அ) துணைப்பிரிவின் இலகுதன்மை 37% சதவீதமாகும். உற்பத்திச் செயல்முறையின் பின்னூட்டல் கட்டுப்பாட்டுப் படிமுறைகள் தொடர்பாகச் சரியான விளக்கமொன்றை விண்ணப்பதாரிகளிடம் காணப்படாமையே இவ்வாறான குறைந்த இலகுதன்மை பெறுவதற்குக் காரணமாகும். எனவே உற்பத்திப் பொருளொன்றின் பல்வேறு படிமுறைகளின்போது பிழைகளைத் திருத்துவதற்காக பிரயோகிக்கப்படும் கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்கு செயல்முறை ரீதியான அறிவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளைத் திட்டமிடல் வேண்டும்.

ஐந்தாம் வினாவின் (iii) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 19% ஆகும். உற்பத்தி முறையொன்றைத் தெரிவுசெய்யும்போது நிறுவனமொன்றின் மூலம் கருத்திற் கொள்ளப்படவேண்டிய நியதிகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளிடதில் விளக்கமொன்று இல்லாதிருத்தலே இவ்வாறு இலகுதன்மை குறைவாக இருப்பதற்கான காரணமாகும். எனவே பணிகள், தொகுதி, பாய்ச்சல் ஆகிய உற்பத்தி முறைகளில் பொருத்தமான உற்பத்தி முறையொன்றைத் தெரிவுசெய்யும்போது நிருவனமொன்று அடிப்படையாகக் கொள்ளப்படும் நியதிகள் தொடர்பாகச் சரியான விளக்கமொன்றை விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஐந்தாம் வினாவின் (iv) (அ) உபபிரிவின் இலகுதன்மை 45% ஆகும். வணிகமொன்றின் செயல்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக உற்பத்தி, ஆய்வு, அபிவிருத்தி என்பவற்றினால் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை தொடர்பாக விண்ணப்பதாரிகளிடத்தில் விரிவான விளக்கமொன்று இல்லாதிருத்தலே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். வணிகமொன்றின் செயற்பாடு, சந்தைப்படுத்தல் போன்ற சகல பிரிவுகளினதும் கருமங்களை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக ஆய்வு, அபிவிருத்தி என்பன துணையாய் அமையும் முறை தொடர்பாகத் தனித்தனியாகத் தெளிவுபடுத்துவதற்கான திறன்களை விண்ணப்பதாரிகளினால் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஐந்தாம் வினாவின் (iv) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 47% சதவீதமாகும். பாய்ச்சல் உற்பத்தியில் சாதகமான பண்புகளைச் சரியாகச் சுட்டிக்காட்டுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு முடியாமல்போனதே இவ்வாறு இலகதன்மை குறைவதற்குக் காரணமாகும். பணிகள், தொகுதி, பாய்ச்சல் ஆகிய உற்பத்தி முறைகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் சாதகமான, பாதகமான தாக்கங்கள் தொடர்பாக விண்ணப்பதாரிகளினால் அறியும் திறனை உறுதிப்படுத்தக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையைத் திட்டமிடல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

6 ஆம் வினா

6. (i) (அ) சமூகம் சார்ந்த சந்தைப்படுத்தலின் (Societal Marketting) இரண்டு முக்கிய குணவியல்புகளை விபரிக்குக.

(i) சமூக நலன்களைப் பாதுகாத்தலும் முன்னேற்றுதலும்.
(ii) வளங்களைக் கவனமானவும் சிக்கனமாகவும் பயன்படுத்தலும் எதிர்கால சந்ததிக்கு வழங்குதலும்.
(iii) சூழலுக்கு நேயமான உற்பத்திகளை மேற்கொள்ளுதல்.
(iv) சமூகத்தின் பொதுவான பாதுகாப்பு.
(v) சமூகத்தின் பொதுவான தேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துதல்.
(vi) சமூகத்தின் நீண்டகால செயற்பாடுகளுக்கான செயன்முறைகளை மேற்கொள்ளுதல்.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) சந்தைப்படுத்தற் கலவையில் 'இடம்' (விநியோகம்) என்ற மாறியில் காணப்படும் இரண்டு கூறுகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(i) வழி (விநியோகம்)
(ii) உள்ளடக்கம்
(iii) பிரதேசம்
(iv) விநியோகக் கலவை
(v) இருப்புக்கள்
(vi) போக்குவரத்து

(2 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(2 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(04 புள்ளி)

(ii) (அ) வானொலிப்பெட்டியை உதாரணமாகக் கொண்டு 'எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப் பொருள்' என்ற எண்ணக்கருவை விளக்குக.

கொள்வனவாளர்களைக் கவரக்கூடியவாறு எதிர்பார்க்கும் முறையில் வசதிகளை இணைத்து உற்பத்தியை வடிவமைத்து வழங்குதல், உற்பத்தியில் உள்ளடக்கப்படவேண்டிய பகுதிகள், தரம், வடிவமைப்பு, பண்டக்குறி, பொதிமுறை போன்ற பண்புகள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணம் : Radio வின் தரமான சத்தம், DVD, CD போன்ற பயன்படுத்தக்கூடிய வசதிகள்

(விளக்கத்திற்கு ½ புள்ளி)
(3 பண்புகள் உதாரணங்கள் எழுதியிருந்தால் ½ புள்ளி)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) உற்பத்திப் பொருளொன்றின் சுட்டுத்துண்டின் (Label) மூலம் வாடிக்கையாளர் ஒருவர் அறிந்து கொள்ளத்தக்க நான்கு தகவல்களைப் பெயரிடுக.

(i) உற்பத்திப் பொருள் தொடர்பான தகவல்கள் (உற்பத்தியாளல், நாடு பதிவிலக்கம்)
(ii) பொருள் அல்லது பண்டக்குறி
(iii) விலை
(iv) உள்ளடங்கியுள்ள பொருட்கள்
(v) உற்பத்தி செய்யப்பட்ட திகதிகள்
(vi) காலாவதியாகும் திகதி
(vii) களஞ்சியப்படுத்தலுக்கான மற்றும் போக்குவரத்துக்கான ஆலோசனைகள்
(viii) அபாய அறிவுப்புக்களும் எச்சரிக்கைகளும்
(ix) நிறையும் அளவும்
(x) தரச் சான்றிதழ்

(4 விடயங்களைப் பெயரிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(iii) (அ) மிகச் சிறந்த விநியோக வழிமுறை ஒன்றைத் தெரிவுசெய்யும்போது வணிகர் ஒருவர் கருத்திற் கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் இரண்டைச் சுருக்கமாக விபரிக்குக.

(i) பொருளின் கிரயம்
(ii) பொருளின் தன்மை (நுகர்வுப் பொருளா கைத்தொழிற் பொருளா)
(iii) சந்தையின் தன்மை (பிரதேச ரீதியிலான சர்வதேச ரீதியிலான)
(iv) கேள்வியின் தன்மை (தொடர்ச்சியான கேள்வியா பருவகாலக் கேள்வியா)
(v) உற்பத்தியாளரின் பலங்கள் (நிதிப்பலம், களஞ்சியப்படுத்தல் பலம், ஊழியர் பலம்)
(vi) போட்டியாளர்களின் விநியோக வழிமுறைகள்
(vii) சட்ட ரீதியான தேவைப்பாடுகளும் நிபந்தனைகளும்
(viii) எடுக்கப்படும் காலம்/ வேகம்

(2 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 01 புள்ளி)
(2 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

(ஆ) சவர்க்கார உற்பத்தியாளர் ஒருவர் சவர்க்காரங்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய நான்கு வழிகளைக் குறிப்பிடுக.

(i) சவர்க்காரத்தின் வடிவம், தரம், நிறம், மணம் போன்றவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி சந்தைக்கு அனுப்புதல்.
(ii) போட்டியாளர் விலையைக் கருத்திற் கொண்டு விலையை நிர்ணயித்தல்.
(iii) புதிய மேம்படுத்தல் முறைகளை அறிமுகஞ் செய்தல்.
(iv) இலகுவாகக் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல்.

(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(iv) (அ) நிதி முகாமையின் பிரதான நோக்கங்கள் இரண்டை எடுத்துக்காட்டுக.

(i) வணிக உரிமையாளருடைய வளங்களையும் செல்வத்தையும் உச்சப்படுத்தல்.
(ii) போட்டியாளர் விலையைக் கருத்திற் கொண்டு விலையை நிர்ணயித்தல்.
(iii) பங்கொன்றுக்கான உழைப்பை உச்சப்படுத்தல்.
(iv) நிதி மோசடிகளையும் தவறான நிதிப் பாவனைகளையும் குறைத்தல்.

(2 விடயங்களுக்கு 01 புள்ளி 02 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(ஆ) கடனொள்ளைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி நிறுவனத்தைத் தெரிவு செய்கையில் வணிகர் ஒருவரால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய நான்கு காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(i) கிரயம்
(ii) நிபந்தனைகள்
(iii) நிறுவனத்தின் தன்மை
(iv) பாதுகாப்பு
(v) கடன் பெறக்கூடிய கால அளவு
(vi) கடன் தொகையின் அளவு
(vii) நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய சேவைகள்
(viii) பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்
(ix) வங்கிக்கும் வணிகங்களுக்குமிடையிலான தொடர்பு

(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(v) பின்வரும் நிதி விகிதங்களின் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான நிலைமைகளை ஒப்பிடுவதன் டும் அது தொடர்பான உமது கருத்துக்களைத் தந்து, எதிர்பார்க்கப்பட்ட நிலையை அடைவதற்காக ஒவ்வொரு நிலைமைகளின்போதும் எடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கை வீதம் ஆலோசிக்குக. (விடைத்தாளில் உமது கருத்துகளையும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் மாத்தரம் எழுதவும்.)

விகிதம்	எதிர்பார்க்கப்பட்ட நிலைமை	உண்மையான நிலைமை	கருத்து	எடுக்க வேண்டிய நடவடிக்கை
1. சரக்குப் புரள்வு (தடவைகள்)	4	1		
2. கடன் சேகரிப்பு (தடவைகள்)	4	2		

கருத்து	எடுக்க வேண்டிய நடவடிக்கை
1. குறைந்தளவிலான விற்பனை இருப்பு வைத்திருக்கும் காலம் அதிகம்	புதிய விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளைப் பயன்படுத்தி விற்பனைகளைப் பயன்படுத்தி விற்பனையை அதிகரிக்கச் செய்தல் வேண்டும்.
2. கடன்பட்டோரிடமிருந்து பணத்தைச் சேகரிக்க அதிக காலம் எடுத்துள்ளது.	காசுக் கழிவுகளை வழங்குதல் கடன்களை அறவிடும் ஊழியர்களை அதிகரித்தல் காரணிப்படுத்தல்.

(2 கருத்துக்களுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(2 நடவடிக்கைகளுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

6ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



54% சதவீதத்தினர் 6 ஆம் வினாவினைத் தெரிவு செய்துள்ளனர். (வரைபு 02) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் கிடைக்கப்பெறும்.

இதில் புள்ளிகள் 00 - 05 ஆயிடையில் 22% மும்
புள்ளிகள் 06 - 10 ஆயிடையில் 44% மும்
புள்ளிகள் 11 - 15 ஆயிடையில் 27% மும்
புள்ளிகள் 16 - 20 ஆயிடையில் 7% மும்

எனப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாவுக்கான புள்ளிகள் 11 அல்லது அதனைவிடக் கூடுதலாக பெறப்பட்ட தொகையினர் 34% சதவீதமாக இருப்பதோடு விண்ணப்பதாரிகளினுள் 66% சதவீதத்தினர் 10 அல்லது அதனைவிடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 9 இல் கூடுதலான இலகுதன்மை கூடிய பிரிவு (ii) (ஆ) வாக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 92% சதவீதமாகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த பிரிவு (v) ஆக இருப்பதோடு அதன் இலகுதன்மை 29% சதவீதமாகும். ஏனைய பிரிவுகளின் இலகுதன்மையை வரைபின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Download Past Papers at : www.freebooks.lk

ஆறாவது வினாவின் (i) (அ) உபபிரிவின் இலகுதன்மை 41% சதவீதமாகும். சமூக ரீதியான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் பண்புகள் தொடர்பாக விரிவான விளக்கமொன்று விண்ணப்பதாரிகளிடம் காணப்படாமையே இவ்வாறு இலகதன்மை குறைவதற்குக் காரணமாகும். ஒவ்வொரு சந்தைப்படுத்தல் எண்ணக்கரு, தொடர்பாகவும் அவ்வெண்ணக்கருவின் மூலம் வெளிப்படுத்தப்படும் பண்புகள் தொடர்பாகவும் விரிவான விளக்கமொன்று கிடைக்கக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையைத் திட்டமிடல் வேண்டும்.

ஆறாம் வினாவின் (i) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 35% ஆகும். சந்தைப்படுத்தல் கலவையின் "இடம்" (விநியோகம்) எனும் மாறிக்குரிய அடிப்படைக் கூறுகள் தொடர்பாக விளக்குவதற்கு விண்ணப்பதாரிகளினால் முடியாமல் போனமையே இவ்வாறு இலகதன்மை குறைவதற்குக் காரணமாகும். சந்தைப்படுத்தல் கலவையில் உற்பத்தி, விலை, இடம், மேம்பாடு எனும் மாறிகளும் அவ் ஒவ்வொரு மாறிகளிலும் உள்ளடங்கும் மூலக்கூறுகள் தொடர்பாகவும் தனித்தனியாக விளக்குவதற்கான திறனை விண்ணப்பதாரிகள் மேம்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

ஆறாம் வினாவின் (ii) (அ) உபபிரிவின் இலகுதன்மை 42% சதவீதமாகும். உற்பத்தி மட்டம் தொடர்பாக வானொளிக் கருவியொன்றை உதாரணமாகக் கொண்டு விளக்குவதற்கான திறன் விண்ணப்பதாரிகளிடம் காணப்படாமையே இவ்வாறு குறைவான அடைவு நிலையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குக் காரணமாகும். எனவே உற்பத்திப் பொருளொன்றின் மட்டங்களைப் பல்வேறு உற்பத்திகளுக்குப் பதிலீடு செய்யப்பட்டு விளக்குவதற்கான திறனை செயல்முறை ரீதியாகப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயல்முறையினைத் திட்டமிடல் வேண்டும்.

ஆறாவது வினாவின் (v) ஆவது பிரிவின் இலகுதன்மை 29% சதவீதமாகும். இருப்புப் புறழ்வு விகிதங்களும் கடன்படுனர் புறழ்வு விகிதங்களும் வணிக நிறுவனமொன்றின் வெற்றியில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை தொடர்பாக விண்ணப்பதாரிகளிடத்தில் விளக்கமற்ற நிலையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். வணிகமொன்றின் நிதி விகிதங்களை விளக்குவதன் மூலம் கருத்துக்களைக் கூறுவதற்கும், இதற்கமைய மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகளை இனங்காண்பதற்குத் தேவையான அறிவு, விளக்கம் என்பவற்றை விண்ணப்பதாரிகள் மேம்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

7 ஆம் வினா

7. (i) (அ) மனிதவளத் தேவையை எதிர்வு கூறும்போது கருத்திற்கொள்ள வேண்டிய நான்கு விடயங்களை எழுதுக.

(i) குறித்த பொருட்கள் சேவைகள் தொடர்பான கேள்வி
(ii) நிறுவனத்தின் குறிக்கோள் / நோக்கம்
(iii) உற்பத்தி முறை
(iv) எதிர்காலத்தில் ஊழியர் ஓய்வு பெறுதல் தொடர்பான விடயங்கள்
(v) ஊழியர் புரள்வு / தாமாக விலகும் ஊழியர்களின் எண்ணிக்கை
(vi) பதவியுயர்வு பெறும் ஊழியர்களின் எண்ணிக்கை
(vii) எதிர்கால செயற்றிட்டங்கள்
(viii) ஓய்வு பெறல்

(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) தொழில் ஒன்றிற்கான விண்ணப்பத்திலிருந்து நேர்முகப்பரீட்சைக் குழுவொன்று விண்ணப்பதாரி ஒருவர் பற்றி பெற்றுக்கொள்ளக்கூடிய நான்கு முக்கியமான தகவல்களை எழுதுக.

(i) தனிப்பட்ட விபரம் (வயது, பிறந்த திகதி, பால், ...)
(ii) கல்வித்தகைமைகள்
(iii) தொழில்சார் தகைமைகள்
(iv) விசேட திறன்கள்
(v) அனுபவம்
(vi) சமூக உற்வுமுறையின் தன்மை
(vii) ஆளுமைகள் (விண்ணப்பம் நிரப்பும் விதம்)
(viii) எதிர்கால எதிர்பார்ப்புகள்

(4 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(ii) நேர்முகப் பரீட்சை ஒன்றில் சிலவேளைகளில் வேலைக்கான சரியான நபரைத் தெரிவுசெய்வது சிக்கலானதாகலாம்.

(i) விண்ணப்பதாரியின் உண்மையான நடத்தையை அறிந்துகொள்ள முடியாது.
(ii) உணர்ச்சிவசப்படல் (மன எழுச்சி)
(iii) தொடர்பாடல் பிரச்சினை
(iv) நேர்முகப்பரீட்சைக் குழுவின் மனப்பாங்கு
(v) நேர்முகப்பரீட்சைக் குழுவின் அனுபவக் குறைவு
(vi) ஏற்கனவே விண்ணப்பதாரிகளில் ஒருவரைத் தெரிவுசெய்து இருத்தல்
(vii) வெளித் தோற்றத்தை மட்டுமே கருத்திற் கொள்ளமுடிதல்
(viii) செல்வாக்கிற்கு உட்படுதல்
(ix) நேர்முகப் பரீட்சைக் குழுக்களிடம் சரியான நியதிகள் காணப்படாமை

(4 விடயங்களுக்கு 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(iii) (அ) செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியர் ஒருவரைக் கிடைக்கத்தக்க இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(i) ஊழியர் உற்பத்தித்திறன் அதிகரித்தல்.
(ii) ஊழியர் ஊக்கப்படுத்தல் உயர்வடைதல்.
(iii) ஊழியரின் பலம், பலவீனங்களை அறியலாம்.
(iv) பயிற்சித் தேவையை இனங்காண முடிதல்.
(v) தொழில்வாழ்க்கைத் திட்டத்தை (Career plan) மேற்கொள்ளலாம்.
(vi) தொழிலினுள் முன் செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப் பெறல்.

(2 விடயங்களைக் குறிப்பிட 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) தொழில் வழங்குனர் - தொழில் பெறுநர் உறவைச் சிறந்த முறையில் பேணுவதற்குத் தொழிற்சங்மொன்று மேற்கொள்ள வேண்டிய இரண்டு நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுக.

(i) முகாமைத் தீர்மானங்களுக்கு உதவுதல்.
(ii) ஊழியர் பிரச்சினைகளை முகாமைக் குழுவுக்குத் தெரியப்படுத்தி பிரச்சினைகளைக் கலந்துரையாடித் தீர்வு காணல்.
(iii) ஊழியர் பிரச்சினைகள் தொடர்பாக முகாமை தீர்வு காணும்போது ஏற்படுத் தடவைகள் தொடர்பில் ஊழியர்களுடன் கலந்துரையாடுதல்.
(iv) முகாமையினால் கொள்கை அமுலாக்கம் செய்யும்போது தொழிற்சங்கமும் பங்குபற்றல்.

(2 விடயங்களைக் குறிப்பிட 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

(iv) வணிகமொன்றின் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைக் கொண்ட பின்வரும் அட்வணையில் தரப்பட்டுள்ள வணிகப் பிரிவு / திணைக்களங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (Transaction Processing Systems) ஆகிய தகவல்களைக் கருத்திற் கொண்டு ①, ②, ③, ④ என இலக்கமிடப்பட்ட இடங்களுக்குரிய விடைகளை மாத்திரம் உமது விடைத்தாளில் எழுதுக.

வணிகப் பிரிவு / திணைக்களம்	கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை
..... **1**	மூலப்பொருட்கள் கொள்வனவு செய்தல்
மனித வளங்கள்	..... **2** .....
..... **3**	விலையிடல்
கணக்குகள்	..... **4** .....

(i) உற்பத்தி / கொள்வனவுத் திணைக்களம்
(ii) ஊழியர் வரவு / சம்பளப் பட்டியல் / பயிற்சி அபிவிருத்தி
(iii) விற்பனைத் திணைக்களம்
(iv) பாதீடு / காசுக்கொடுக்கல் வாங்கல் / பொதுப்பேரேடுகள் தயாரித்தல்

(4 விடயங்களைக் குறிப்பிட 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(v) (அ) சிறந்த தகவல் ஒன்றின் நான்கு குணவியல்புகளைக் குறிப்பிடுக.

(i) பொருத்தமானதாக இருத்தல்.
(ii) சரியானதாக இருத்தல்.
(iii) பூரணமானதாக இருத்தல்.
(iv) நம்பகமானதாக இருத்தல்.
(v) விபரண ரீதியானதாக இருத்தல்.
(vi) தேவையான நேரத்திற்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
(vii) குறைந்த செலவுடையதாக இருத்தல்.
(viii) பல்வேறு ஊடகங்களினூடாகவும் சமர்ப்பிக்கக்கூடியதாக இருத்தல் திருத்தமானது.
(ix) இற்றைப்படுத்தக்கூடிய தன்மை
(x) பாதுகாப்புத் தன்மை கொண்டது.
(xi) நெகிழ்வுத் தன்மை கொண்டது
(xii) விளக்கம் பெற்கூடியத் தன்மை

(4 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) வணிக நிறுவனமொன்றுக்கு தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் (ICT) பயன்பாட்டின் மூலம் கிடைக்கத்தக்க நான்கு நன்மைகளை எடுத்துக்காட்டுக.

(i) மிகச் சரியான தீர்மானம் எடுக்க முடிதல்.
(ii) வணிக நடவடிக்கையில் ஏற்படும் தவறுகளைக் குறைக்க முடிதல்.
(iii) வணிக செயற்படுகளை வினைத்திறனாக மேற்கொள்ள முடிதல்.
(iv) செயன்முறையின் பயனுறுதி.
(v) வெளியீடுகளின் தரவுகள் உயர்வடைதல்.
(vi) தகவல்களுக்கு பாரிய களஞ்சியப்படுத்தல் வசதிகளும் மீள்பாவனையும் காணப்படல்.
(vii) செலவு குறைவாக இருத்தல்.
(viii) தொடர்பாடல் செயன்முறையை இலகுபடுத்த முடிதல்.
(ix) வாடிக்கையாளர் எண்ணிக்கையை அதிகரிக்க முடிதல்.
(x) சர்வதேச ரீதியாய வியாபாரத்தில் ஈடுபட முடிதல்.

(4 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

7ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



7 ஆம் வினாவினை 62% சதவீதத்தினர் தெரிவு செய்துள்ளனர். (வரைபு 02) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் கிடைக்கப்பெறும்.

இதில் புள்ளிகள் 00 - 05 ஆயிடையில் 19% மும்
புள்ளிகள் 06 - 10 ஆயிடையில் 39% மும்
புள்ளிகள் 11 - 15 ஆயிடையில் 32% மும்
புள்ளிகள் 16 - 20 ஆயிடையில் 10% மும்

எனப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாவுக்கான புள்ளிகள் 11 அல்லது அதனைவிடக் கூடுதலாகப் பெறப்பட்ட தொகையினர் 42% சதவீதமாக இருப்பதோடு விண்ணப்பதாரிகளினுள் 58% சதவீதத்தினர் 10 அல்லது அதனைவிடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 8 இல் இலகுதன்மை கூடிய பிரிவு (v) (அ) வாக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 70% சதவீதமாகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த உபபிரிவாக (i) (அ) வாக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 28% ஆகும். ஏனைய வினாப்பிரிவுகளின் இலகுதன்மையை வரைபின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Download Past Papers at : www.freebooks.lk

ஏழாம் வினாவின் (i) (அ) உபபிரிவின் இலகுதன்மை 28% சதவீதமாகும். மனித வளங்களின் தேவைப்பாட்டினை எதிர்வு கூறுதலின்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பான அறிவு விண்ணப்பதாரிகளிடம் காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். எனவே மனித வளங்களைத் திட்டமிடும்போது மனித வளங்களின் தேவைப்பாட்டினை எதிர்வுகூறல் தொடர்பாக விரிவான விளக்கமும் தெளிவும் கிடைக்கக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளைத் திட்டமிடல் வேண்டும்.

ஏழாம் வினாவின் (ii) உபபிரிவின் இலகுதன்மை 43% சதவீதமாகும். நேர்முகக் கலந்துரையாடல் சோதனை முறைமையில் காணப்படும் பொதுவான பலவீனங்களுள் சரியான நபரைத் தெரிவு செய்வதில் சிரமத்தை ஏற்படுத்துவதில் தாக்கம் செலுத்தக்கூடிய விடயங்களை விபரிப்பதற்கு விண்ணப்பதாரிகளினால் முடியாமல் போனதே இவ்வாறு குறைவான அடைவு நிலையொன்று ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தது. எனவே பணியாளர்களைத் தெரிவு செய்தல் முறை தொடர்பாக விரிவாக அறிந்து கொள்வதன் மூலம் விண்ணப்பதாரிகள் அது தொடர்பான விளக்கத்தை விரிவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஏழாம் வினாவின் (iii) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 39% சதவீதமாகும். சிறந்த சேவை வழங்குனர் சேவைபெருனர் தொடர்பொன்றைப் பேணுவதற்காகத் தொழிற்சங்கங்கள் மூலம் நிறைவேற்றப்படவேண்டிய கருமங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகளிடம் காணப்படும் அறிவு குறைவாக இருந்தமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். ஊழியம் உரிமைகளை வென்றெடுப்பதைப் போன்றே சிறந்த தொழில் பெருனர் தொழில் வழங்குனர் தொடர்பொன்றைப் பேணிக்கொள்வதற்குத் தொழிற்சங்கங்கள் பங்களிப்புச் செய்யப்படும் என்பதைத் தெளிவுபெறக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையினைத் திட்டமிடல் வேண்டும்.

ஏழாம் வினாவின் (iv) ஆம் பிரிவின் இலகுதன்மை 44% சதவீதமாகும். வணிகமொன்றின் அன்றாடச் செயற்பாட்டுக் கருமங்களுக்காகக் கொடுக்கல் வாங்கல் ஒழுங்கமைப்பு முறைமை துணையாக அமையும் முறை தொடர்பாகத் தெளிவொன்று விண்ணப்பதாரிகளிடம் இல்லாதிருப்பதே இவ்வாறு இலகுதன்மை கீழ் மட்டத்திற்குச் செல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது. தகவல் முறைமையானது வணிக நிருவனமொன்றின் பல்வேறு பிரிவுகளின் கருமங்களை இலகுபடுத்துவதற்காகப் பிரயோகிக்கப்படும் முறை தொடர்பாக விரிவான விளக்கமொன்றை விண்ணப்பதாரிகளுகுக் கிடைக்கக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையைத் திட்டமிடல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

8 ஆம் வினா

8. (i) (அ) சுருக்கமாக விபரிக்குக.

(அ) இலத்திரனியல் மகாநாடு (e- Conference)
(ஆ) எழுத்து வடிவிலான உரையாடுதல் (Text chatting)
(இ) குரல் வழி உரையாடுதல் (Voice chatting)
(ஈ) காணொளி மூலம் உரையாடுதல் (Video chatting)

(அ) **இலத்திரனியல் மகாநாடு**
இலத்திரனியல் உபகரணப்படுத்தி வெவ்வேறு இடங்களில் இருப்பவர்கள் நேருக்கு நேர் பார்த்து உரையாடுதல் முறை.

(ஆ) **எழுத்து வடிவிலான உரையாடுதல்**
தமது கருத்துகளை அச்சு பதித்து ஏனைய தரப்பினருக்கு முன்வைத்தல்.

(இ) **குரல் வழி உரையாடுதல்**
நுண் அலைகளைப் பயன்படுத்தி வாய்மொழி மூலமான கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்ளல்.

(ஈ) **காணொளி மூலம் உரையாடுதல்**
இணைய படப்பிடிப்புக் கருவியைப் (Web Camera) பயன்படுத்தி ஒலிக்கு மேலதிகமாக காட்சிகளையும் பரிமாற்றி உரையாடுதல்.

(4 விடயங்களைக் குறிப்பிட 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)
(கோடிட்ட விடயங்களுக்கு புள்ளி வழங்கப்படுதல் வேண்டும்)

(ii) இலத்திரனியல் தகவல் முறைமை ஒன்றின் ஏதேனும் நான்கு கூறுகளைப் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

(i) மென்பாகம் (Hardware)
தரவுகளை மாற்றல் செயன்முறைகளுக்கு உட்படுத்துவதற்காக கணினியில் பயன்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களைக் குறிக்கும்.
உதாரணம் : Word, Excel, Ms Dos, Windows, Pwer Point

(ii) வன்பாகம் (Software)
தகவல் முறைமையினுள் காணப்படும் அனைத்துப் பௌதிகப் பொறிமுறைகளும் உபகரணங்களும் வன்பாகமாகும்.
உதாரணம் : Key Board, Moniter, CPU, Primter

(iii) உயிர்ப்பாகம் (liveware)
தகவல் முறைமையை பயன்படுத்தும் நபர்கள் உயிர்ப்பாகமாகும்.
உதாரணம் : கணினியில் கருமமாற்றும் உத்தியோகத்தர்கள் ATM அட்டையைப் பயன்படுத்துவோர்.

(iv) தரவு (Data)
தகவல் முறைமைக்கு வழங்கப்படும் தரவுகளைக் குறிக்கும்.

(v) நடைமுறைகள் (Procedure)
தகவல் முறைமையின் கருமங்களையும் கருவிகளையும் கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள நியமங்கள் சட்டதிட்டங்கள் கொள்கைகள் என்பன நடைமுறைகள் எனக் குறிப்பிடப்படும்.

Download Past Papers at : www.freebooks.lk

(vi) நிறுவனப்பாகம் (Firmware)

கணினிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் நிறுவனப்பாகம் எனப்படும்.

உதாரணம் : Micro soft, Dell, HP, Sony, IBM

(4 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(4 விடயங்களை விளக்க ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(iii) (அ) வணிகத் திட்டம் ஒன்றின் தேவைக்கான இரண்டு காரணங்களை எழுதுக.

(1) வணிகக் கருமங்களைக் கொண்டு நடாத்த வழிகாட்ட

(2) வணிகம் தொடர்பாக அக்கறை காட்டும் தரப்பினருக்கு அது தொடர்பான சிறந்த தெறிவினைப் பெற்றுக்கொடுக்க

(3) வணிகத்திற்குத் தேவையான நிதி வசதிகளை பெற்றுக்கொள்ள

(4) முகாமை நடவடிக்கைகளுக்கு வசதியளிக்க

(2 விடயங்களைக் குறிப்பிட 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) பல்வேறு வணிகக் கருத்துக்களிலிருந்து அமுல்படுத்தக்கூடியதும் இறுதியானதும் முடிவானதுமான வணிகக் கருத்தைத் தெரிவுசெய்யும் செயன்முறையின் படிமுறைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் குறிப்பைப் பூரணப்படுத்துக.

(உமது விடைத்தாளில் இக்குறிப்பை வரைந்து விடையளிக்குக.)

பகுப்பாய்வின் தன்மை	**மதிப்பீட்டிற்காகப் பயன்படுத்தும் காரணி வகை**
(1) பேரினச் சூழல்	புறச் சூழல் காரணிகள்
(1) சிற்றினச் சூழல்	அகச் சூழல் காரணிகள் அண்மிய (வேலைச்) சூழல் காரணிகள்

(2 விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் 01 புள்ளி)

(04 புள்ளிகள்)

(iv) (அ) வணிகமொன்றின் நிதித் திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய இரண்டு பிரதான பகுதிகளைப் பெயரிடுக.

(1) மதிப்பிடப்பட்ட செயற்றிட்டக் கிரயம்

(2) மதிப்பிடப்பட்ட இலாப நட்டக் கூற்று

(3) மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று

(4) மதிப்பிடப்பட்ட ஐந்தொகை

(5) கடனை மீளச் செலுத்தும் அட்டவணை

(2 விடயங்களைப் பெயரிட 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியல்லாத கிரயங்களுக்கு நான்கு உதாரணங்கள் எழுதுக.

(1) நிலையான நிர்வாகச் செலவுகள்

(2) விற்பனை செலவுகள்

(3) நிதிச் செலவுகள்

(4) ஏனைய செலவுகள்

(4 விடயங்களைக் குறிப்பிட ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(04 புள்ளிகள்)

Download Past Papers at : www.freebooks.lk

(v) வணிகமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் நபர் ஒருவர் நிதிப் பகுப்பாய்வை மேற்கொள்வதன் மூலம் எடுக்கத்தக்க தீர்மானங்கள் இரண்டை விபரிக்குக.

(1) வணிகத்தை ஆரம்பிக்க முடியுமா என்ற சாத்தியத்தை அறிந்து கொள்ள
(2) முதலீட்டின் மீதான போதுமான திரும்பலை அறிந்து கொள்ள
(3) முதலீட்டிற்கான திரும்பலைப் பெற முடியாது எனின், என்ன நடவடிககை எடுக்கலாம் என்பதனை அறிய

(2 விடயங்களைக் குறிப்பிட 02 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

8ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும் ஆலோசனைகளும் :



8 ஆம் வினாவினை 31% சதவீதத்தினர் தெரிவு செய்துள்ளனர். (வரைபு 02) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் கிடைக்கப்பெறும்.

இதில் புள்ளிகள் 00 - 05 ஆயிடையில் 37% மும்
புள்ளிகள் 06 - 10 ஆயிடையில் 36% மும்
புள்ளிகள் 11 - 15 ஆயிடையில் 22% மும்
புள்ளிகள் 16 - 20 ஆயிடையில் 5% மும்

எனப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வினாவுக்கான புள்ளிகள் 11 அல்லது அதனைவிடக் கூடுதலாகப் பெறப்பட்ட தொகையினர் 27% சதவீதமாக இருப்பதோடு விண்ணப்பதாரிகளினுள் 73% சதவீதத்தினர் 10 அல்லது அதனைவிடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



இவ்வினாவிற்குரிய உபபிரிவுகள் 10 இல் இலகதன்மை கூடிய பிரிவு (i) (ஈ) வாக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 58% சதவீதமாகும். அதேபோன்று இலகுதன்மை குறைந்த பிரிவு (iii) (ஆ) வாக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 10% சதவீதமாகும். ஏனைய வினாப்பிரிவுகளின் இலகுதன்மையினை வரைபில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Download Past Papers at : www.freebooks.lk

எட்டாம் வினாவின் (i) (அ) உபபிரிவின் இலகுதன்மை 46% சதவீதமாகும். இலத்திரனியல் கருத்தரங்கு தொடர்பாகச் சரியான விளக்கமொன்றை விண்ணப்பதாரிகளிடத்தில் காணப்படாமையே இதற்குரிய காரணமாகும். சுருக்கக் குறிப்புக்களை எழுதும்போது அதன் அனுகூலங்கள், பிரதிகூலங்கள், பண்புகள் போன்றன குறிப்பிடப்படுவதனின்றும் விடுபட்டு குறிப்பிட்ட அடிப்படை அறிமுகம் மட்டும் போதுமானது என விண்ணப்பதாரிகளை அறிவூட்டச் செய்தல் போதுமானது. இலத்திரனியல் செயலயர்வு தொடர்பாகச் செயற்பாட்டு ரீதியான விளக்கமொன்று கிடைக்கக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையினைத் திட்டமிடல் வேண்டும்.

எட்டாவது வினாவின் (i) (இ) துணைப்பிரிவின் இலகுதன்மை 45% சதவீதமாகும். வலையமைப்புக்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளான குரல் ஒலி தொடர்பாக விண்ணப்பதாரிகளிடம் காணப்படும் விளக்கம் குறைவாக இருப்பதே இவ்வாறு இலகுதன்மை குறைவாக இருப்பதற்குக் காரணமாகும். குரல் ஒலியைச் செயற்பாட்டு ரீதியாக நடைமுறைப்படுத்தும் முறை தொடர்பாக விண்ணப்பதாரிகளிடத்தில் விளக்கமொன்று ஏற்படுமாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையைத் திட்டமிடுதல் வேண்டும்.

எட்டாவது வினாவின் (ii) பிரிவின் இலகுதன்மை 47% சதவீதமாகும். இலத்திரனியல் தகவல் முறைமையொன்றில் காணப்படும் கருவிகளை விபரிப்பதற்கு விண்ணப்பதாரிகளினால் முடியாமல் போனமையே இவ்வாறு குறைவான அடைவு நிலையைப் பெருவதற்குக் காரணமாகும். இலத்திரனியல் தகவல் முறைமையொன்றில் காணப்படும் கருவிகள் தொடர்பாகச் செயற்பாட்டு ரீதியான விளக்கமொன்றைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையைத் திட்டமிடல் வேண்டும்.

எட்டாவது வினாவின் (iii) (அ) உபபிரிவின் இலகுதன்மை 49% சதவீதமாகும். வணிகத்திட்டம் ஒன்றின் தேவைப்பாடு தொடர்பாகச் சரியான விளக்கமொன்றை விண்ணப்பதாரிகளிடத்தில் காணப்படாமையே இவ்வாறு இலகுதன்மை குறைவாக இருப்பதற்குக் காரணமாகும். மாதிரி வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதனூடாக வணிகத்திட்டம் தொடர்பாகச் செல்முறை ரீதியான விளக்கமொன்றை விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள முடியும்.

எட்டாவது வினாவின் (iii) (ஆ) உபபிரிவின் இலகுதன்மை 10% சதவீதமாகும். வணிக எண்ணங்களைத் தெரிவுசெய்யும் செயல் முறைகளின் படிமுறைகளை ஒழுங்கு முறையாகச் சுட்டிக்காட்டுவதற்கு விண்ணப்பதாரிகளினால் முடியாமல் போனமைக்கு இதுவே காரணமாகும். பொருத்தமான வணிக எண்ணமொன்றைத் தெரிவு செய்வதற்கான முதலாவதாகப் பேரினப் பகுப்பாய்விலும் இரண்டாவதாகச் சிற்றினப் பகுப்பாய்விலும் ஈடுபடுதல் வேண்டும் என உதாரணங்களோடு தெளிவாக இருக்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயல்முறையினைத் திட்டமிடல் வேண்டும்.

எட்டாவது வினாவின் (iv) (அ) உபபிரிவின் இலகுதன்மை 35% சதவீதமாகும். வணிகமொன்றின் நிதித்திட்டத்தில் உள்ளடக்கவேண்டிய பிரதான பிரிவுகளைப் பெயரிட்டுக் காட்டுவதற்கு விண்ணப்பதாரிகளினால் முடியாமல் போனமையே இவ்வாறு இலகுதன்மை குறைவதற்குக் காரணமாகும். வணிகமொன்றின் நிதித்திட்டமொன்று விண்ணப்பதாரிகளினால் செயல்முறை ரீதியானதாகத் தயாரிப்பதன் மூலம் நிதித் திட்டம் தொடர்பான விளக்கத்தினை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

எட்டாவது வினாவின் (v) (அ) உபபிரிவின் இலகுதன்மை 17% சதவீதமாகும். வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற நபரொருவருக்கு நிதிப் பகுப்பாய்வின் மூலம் எடுக்கக்கூடிய தீர்மானங்கள் தொடர்பாக விண்ணப்பதாரிகளிடத்தில் விளக்கமொன்றில்லாமையே இவ்வாறு இலகுதன்மை கீழ்நிலைக்குச் செல்வதற்குக் காரணமாகும். எனவே நிதித்திட்டத்திற்குரிய நிதி அறிக்கைப் பகுப்பாய்வு தொடர்பாக விளக்கமொன்றை விண்ணப்பதாரிகளுக்குப் பெற்றுக்கொடுக்கக் கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையினைத் திட்டமிடல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

2.2.3 **வினாத்தாள் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் :**



வினாத்தாள் II இன் வினா இலக்கம் 01, 02, 03, 04 ஆகிய வினாக்கள் I ஆம் பகுதிக்குரியதாகும். வினா இலக்கம் 05, 06, 07, 08 ஆகிய வினாக்கள் II ஆம் பகுதிக்குரியதாகும். இவ்விரு பகுதியிலுமிருந்து குறைந்தது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து இரண்டு வினாக்கள் வீதம் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

பகுதி I இல் 63% சதவீதம் கொண்ட உயர்வான இலகுதன்மையொன்றை மூன்றாம் வினாவிற்கே காணக்கூடியதாக இருந்ததோடு குறைவான இலகுதன்மையைக் கொண்ட 54% சதவீத்தை நான்காம் வினாவிற்கே காணக்கூடியதாக இருந்தது.

பகுதி II இல் 51% சதவீதத்தைக் கொண்ட உயர்வான இலகுதன்மையை ஐந்தாம், ஏழாம் வினாக்களுக்கே காணப்பட்டதுடன் குறைந்த இலகுதன்மையான 38% சதவீதத்தை 8 ஆவது வினாவிற்கே காணப்பட்டது.

I, II ஆம் பகுதிகளின் முழுமையாக இலகுதன்மையை எடுத்து நோக்கும்போது I ஆம் பகுதியின் முழுமைான சராசரி இலகுதன்மை 59% சதவீதமாகும். அதேபோன்று II ஆம் பகுதியின் முழுமையான சரராசரி இலகுதன்மை 47% சதவீதமாகும்.

Download Past Papers at : www.freebooks.lk

பகுதி III

3.0 விடையளிக்கும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும், முன் மொழிவுகளும் :

3.1 விடையளிக்கும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் :

பொது அறிவுறுத்தல்கள் :

* வினாப்பத்திரத்திலுள்ள பிரதான அறிவுறுத்தல்களை வாசித்துச் சிறந்த முறையில் விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து எத்தனை வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும், எந்த வினா கட்டாயமானது, எவ்வளவு காலம் வழங்கப்பட்டுள்ளது, எவ்வளவு புள்ளிகள் கிடைக்கப்பெறும் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டும். வினாக்களை நன்கு வாசித்து வினாக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். விடையினைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற வினாக்கள் தொடர்பாகச் சரியான விளக்கமொன்றை ஏற்படுத்திக்கொண்டு விடை எழுதுதல் வேண்டும்.

* வினாத்தாள் I இன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். நேரம் இரண்டு மணித்தியாலங்கள் வழங்கப்படும்.

* வினாத்தாள் II இன் பகுதி I, பகுதி II இலிருந்து குறைந்தது இவ்விரு வினாக்கள் வீதம் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். நேரம் மூன்று மணித்தியாலங்கள் வழங்கப்படும்.

* அனைத்து பிரதான வினாக்களையும் புதிய பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.

* விண்ணப்பதாரர்களின் பரீட்சைச் சுட்டெண்ணை அணைத்துப் பக்கங்களிலும் குறிப்பிட்ட இடத்தில் எழுதுதல் வேண்டும்.

* வினா இலக்கத்தையும், உபபிரிவுகளின் இலக்கங்களையும் சரியாக எழுதுதல் வேண்டும்.

* அனைத்து வினாக்களையும் நன்றாக வாசித்து விடையெழுதுதல் வேண்டும். வினாக்களின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள், பெற்றுக்கொள்ளவேண்டிய விடைகள் அல்லது அடிப்படையாகக் கொள்ளப்படவேண்டிய எந்தளவு பெறுபேறு என்பன தொடர்பான தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

* வினாக்களுக்கு விடையளிக்கும்போது வழங்கப்பட்டிருக்கும் காலத்தைச் சரியாக முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

* தெளிவான கை எழுத்துக்களினால் விடையளிக்கப்படல் வேண்டும். விடையளிக்கும்போது நீலம் அல்லது கருப்பு நிறப் பேனைகளை மட்டும் பயன்படுத்துதல் வேண்டும். ஏனைய நிறப் பேனைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

* சரியான குறுகிய விடைகளை எழுதுவதற்குத் தேவையான சந்தர்ப்பங்களின்போது நீண்ட விபரங்களை உள்ளடக்காதிப்பதைப் போன்று விரிவான விடையினை வழங்கவேண்டிய சந்தர்ப்பங்களின்போது குறுகிய விடைகளை வழங்காதிருத்தல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

விசேட அறிவுறுத்தல்கள் :

* வினா இலக்கம் 01 தொடக்கம் 30 வரையிலான பல்தேர்வு வினாக்களுக்குக் குறிப்பிட்ட இடத்தில் சரியான நிரலின் இலக்கத்தைப் பேனையொன்றினால் குறிப்பிடவும்.

* வினா இலக்கம் 31 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்குக் குறித்த இடைவெளிகளில் பொருத்தமான சொற்பதன்களை எழுதி இடைவெளிகளை நிரப்புதல் வேண்டும்.

* வினா இலக்கம் 41 தொடக்கம் 50 ரையிலான வினாக்களுக்குச் சரியான விடையினைக் குறிப்பிட்ட இடத்தில் எழுதுதல் வேண்டும்.

* ஒவ்வொரு வினாக்களின் கீழ் காணப்படும் வினா உபபிரிவுகள் அனைத்திற்கும் சரியான இலக்கமிடப்பட்டு விடை எழுதுதல் வேண்டும்.

* தர்க்க ரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் உரிய விடயங்களை முன்வைத்தல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

3.2 கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் தொடர்பான கருத்துக்களும், முன்மொழிவுகளும் :

* ஆசிரியர் வணிகக் கல்விப் பாடத்தின் தன்மை தொடர்பாக ஆசிரியர் ஆளமானதும், விரிவான விளக்கத்துடன் கூடியதும் இற்றைப்படுத்தக் கூடியதுமான அறிவுடனும் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் பிரவேசிக்க வேண்டும்.வணிகக் கல்வியானது நாளுக்கு நாள் மாற்றமடைந்து செல்கின்ற அனேக பாட விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. எனவே அவ்வாசிரியர்கள் அம்மாற்றங்கள் தொடர்பாக அறிந்து கொள்பவராக அவர்கள் இருக்க வேண்டும்.

* வணிகக் கல்விப் பாடமானது நியாய பூர்வமான அறிவுக்கிணைவாக விரிவடைந்து செல்லும் பாடமொன்றாகும். எனவே அப்பாடமானது துறையினுள் நிலைத்திருப்பதற்கும் விருப்பம் கொள்வதற்கும் (Live & Love) ஆசிரியர் உடன்பட வேண்டுவதுடன் அதற்காக விண்ணப்பதாரிகளுக்கு வழிகாட்டலொன்றையும் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

* வணிகக் கல்விப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் வகுப்பறையினுள் இடம் பெறும் பொதுவான கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளுக்கு மேலதிகமாகக் குழுச் செயற்பாடுகள், களச் சுற்றுளா, செயற்திட்டம், கண்காட்சி முன்வைப்புக்கள் போன்ற செயற்பாடுகள் என்பவற்றைப் பாடம் தொடர்பான அறிவைப் பெறுவதற்காகப் பயன்படுத்தல் வேண்டும். பாடத்தில் காணப்படும் எண்ணக்கருக்களை உறுதிப்படுத்தக்கூடிய சகல சந்தர்ப்பங்களின்போதும் விடய ஆய்வினைப் பயன்படுத்துதல் வேண்டும். இச்செயற்பாடுகளின் போது விண்ணப்பதாரிகளின் உச்சப் பங்களிப்புகக்காகச் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயல்முறைகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். செயல்முறை ரீதியான செயற்பாடுகளினூடாகப் பாடப்பிரிவுகளை விளக்குவதற்கும் பிரயோகிப்பதற்கும் விணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

* பாட அறிவினை உறுதிப்படுத்தும் பொழுது வசதிகளுக்கமைய ஒளி ஒலிக் காட்சிகள், கணினி மென்பொருட் தொகுதிகள், வலையமைப்புக்களைப் பயன்படுத்துதல் போன்ற சந்தர்ப்பங்களுடன் பல்லூடகச் சாதனம் (Multy media) போன்ற நவீன தொழில் நுட்ப முறைகளையும் பயன்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்.

* பாட விளக்கத்தினையும், அறிவினையும் இற்றைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையினையும், ஏனைய வெளியீடுகள், வருடாந்த வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகள், பாட விடயங்களுக்குரிய கட்டளைச் சட்டங்கள், கட்டளைகள், சட்டதிட்டங்கள் நிறுவன ரீதியான உதவிகளை வழங்கும் நுகர்வோர் கருமங்கள் தொடர்பான அதிகார சபை, இலங்கைக் கட்டளைப் பணியகம் போன்ற அமைப்புகளது சட்டரீதியான அறிக்கைகள் என்பவற்றை பரிசீலனை செய்தல் வேண்டும்.

* வணிகக் கல்விப் பாடத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்களைப் பரிசீலனை செய்யும் பொழுது கற்றல் - கற்பித்தல் செயன்முறையினூடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய விசேட எதிர்பார்ப்புத் துறையொன்று காணப்படுகின்றது. அவ்வெதிர்பார்ப்பானது பிரதானமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை விட தனி நபர்களுக்கிடையிலான தொடர்புகள் கட்டியெழுப்பக்கூடிய வாழ்க்கைப் பழக்கவழக்கங்களாகக் கற்றல் பேறுகளைத் தயாரித்தல் வேண்டும். அவ்வெதிர்பார்ப்புக்களை அடைந்து கொள்ளக்கூடியவாறு வணிகக் கல்விப் பாடத்தினைக் கற்பிக்கும் போது பல்வேறு முறைகளைப் பின்பற்றுவது தொடர்பில் ஆசிரியர் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆசிரியர் வழிகாட்டியினூடாகச் சுட்டிக்காட்டப்படும் வழிகாட்டல்களினூடாக ஆசிரியர்களினால் பொருத்தமான முறைகளைப் பயன்படுத்துவதனால் வெற்றிகரமான கற்றல் - கற்பித்தல் வேலைத்திட்டங்களுக்கு இது காரணமாக அமையும்.

Download Past Papers at : www.freebooks.lk

* ஆசிரியர் தனது கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேற்கொள்ளும்வேளையில் விண்ணப்பதாரிகளை மதிப்பீட்டிற்குற்படுத்துதல் வேண்டும். வகுப்பறையில் விண்ணப்பதாரிகள் கற்றலில் ஈடுபட்டிருக்கும் வேளையில் ஆசிரியர்களுக்கு அவர்களின் கற்றல் திறன், கற்றல் திறனின்மை, விசேடத்துவங்கள் என்பன தொடர்பாக அறிந்துகொள்வதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இதற்கமைய கற்றல் - கற்பித்தல் செயல்முறை இடம்பெறும் வேளையிலேயே விண்ணப்பதாரிகளது பலவீனங்களை இனங்கண்டு இதற்கான பின்னூட்டல் வேளைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குக் கற்றல் - கற்பித்தல் செயல்முறையைத் திட்டமிடப்படல் வேண்டும்.

* ஆசிரியர் கைநூலில் பயிற்சி செய்வதற்கு விண்ணப்பதாரிகளின் கவனத்தைச் செலுத்தக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயல்முறையைத் திட்டமிடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

* வினாவில் குறிப்பிட்டுக் காட்டப்படும் வரைவிலக்கணங்கள், விளக்கங்கள் போன்ற பதங்கள் ஒன்றிற்கொன்று வேறுபட்டது எனச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அதே போன்று கண்டறியுங்கள், விளக்குங்கள், விபரியுங்கள், அறிமுகப்படுத்துங்கள் போன்ற பதங்கள் ஒன்றிற்கொன்று வேறுபட்ட விளக்கம் தரப்படுகின்றது என விண்ணப்பதாரிகளுக்கு விளக்கப்படுத்திக் கொடுத்து ஒன்றிற்கொன்று வேறுபட்ட வினாக்களுக்கு விடையளிப்பதில் அவர்களை ஈடுபடுத்தவும்.

* ஆசிரியர் தனது அறிவினைப் பயன்படுத்தி சிறிய விடய ஆய்வுகளை நிர்மானித்து இதற்காக நியாய பூர்வமான அறிவினைப் பிரயோகிக்கக்கூடிய விதத்தினை மாணவர்களோடு கலந்துரையாடச் செய்வதினூடாக இவ்வாறான வினாக்களுக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்த முடியும்.

* வணிகக் கல்விப் பாடத்தின் II ஆம் வினாத்தாளானது I, II எனும் இரு பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். இங்கு I ஆனது தரம் 12 இற்கும் பகுதி II ஆனது தரம் 13 இற்குமுரியதாகும். பொதுவாக மதிப்பீட்டினை நோக்கும்போது பகுதி I இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள நிலைமைகளைக் காணக்கூடியதாக இருப்பினும் II ஆம் பகுதிக்குக் குறைவான புள்ளிப் பெறுமானங்களையே பெற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே 13 இற்குரிய பாட அலகின் மீது கூடிய கவனத்தைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின்போது செலுத்துதல் வேண்டும். அத்துடன் பகுதி II இற்குரிய வினாக்களுக்கு மாணவர்களைக் கூடுதலான பயிற்சியளிக்கப்பட வேண்டிய தேவையொன்றும் இருக்கின்றது என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

* புலூமின் வகைப்படுத்தல்களுக்கமைய அறிவு, தெளிவு, பிரயோகம், பகுப்பாய்வு, மதிப்பீடு, ஆக்கம் எனும் கற்றல் மட்டங்கள் II ஆம் வினாத்தாளின் அடைவு மட்டத்தோடு ஒப்பிடும்போது அந்தளவு வெற்றியொன்றைக் காண முடியாது. அதன் ஆக்கம் தெளிவு எனும் கற்றல் மட்டங்கள் மிகக் குறைவான மட்டத்திலும் இருக்க அறிவு, பிரயோகம் என்பன மத்திய தர மட்டத்திலும் காணப்படும் அதேவேளை பகுப்பாய்வு, மதிப்பீடு ஆகிய மட்டங்களின்போது மட்டுமே ஓரளவு வெற்றிகரமான நிலைமையொன்றைக் காண முடியும். எனவே அறிவு, தெளிவு, பிரயோகம், பகுப்பாய்வு, மதிப்பீடு, ஆக்கம் ஆகிய அனைத்துத் தேர்ச்சிகளையும் விண்ணப்பதாரிகளுக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளைத் திட்டமிடல் வேண்டும்.

* க.பொ.த. (உ.தர) வணிகக் கல்விப் பாடத்தின் வினாத்தாளிற்கு விடையளித்துள்ள முறையினை நோக்கும்போது வணிகக் கல்விப் பாடத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள், அரும் பொருட் சொற்கள் நவீன போக்குகள் என்பன தொடர்பாக விண்ணப்பதாரிகளிடம் காணப்படும் அறிவு போதுமானதாக இல்லை என்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அதேபோன்று விடையினைச் சரியாக பொருத்தித் தெளிவாக முன்வைப்பதற்கான திறனை விண்ணப்பதாரிகள் பெற்றிருக்காமையை மற்றோர் காரணமாகக் குறிப்பிடலாம். எனவே மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

Download Past Papers at : www.freebooks.lk

Dear students!

We have Past Papers and Answers (Marking Schemes), Model Papers and Note books for English, Tamil and Sinhala Medium).

Please visit :

www.freebooks.lk

or click on this page to vist our site!